# யாழ்/ஜெய்ப்பூர் செயற்கைக் கால் திட்டம்

## பதினொராவது ஆண்டு நிறைவுமலர்

(1997 ஆடி - 1998 மார்கழி)



இவர்கள் வாழ்வும் இனிதே அமைக

இல. 5, பழைய பூங்கா வீதி,
சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments.

COLOMBO FRIEND - IN - NEED - SOCIETY
JAFFNA BRANCH
(JAIPUR FOOT PROGRAMME)
NO. 05, OLD PARK ROAD
JAFFNA, SRI LANKA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் / ஜெய்ப்பூர்
# செயற்கைக் கால் திட்டம்

## பதினொராவது ஆண்டு

# நிறைவு மலர்

## (1997 ஆடி - 1998 மார்கழி)

COLOMBO FRIEND-IN-NEED SOCIETY
JAFFNA BRANCH

இவர்கள் வாழ்வும் இனிதே அமைக


இல. 5, பழைய பூங்கா வீதி,
சுண்டிக்குழி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி. இல. 021-2574



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் ஜெய்ப்பூர் பாதத்தின் ஆரம்பமும் விருத்தியும்

இலங்கையிற் செயற்படுத்தப்படும் ஜெய்ப்பூர் பாதத்திட்ட முறையானது எமது தாய்த்திரு நாட்டிலுள்ள உடலூனமுற்ற மக்களுக்கு மறு வாழ்வளிக்கும் வண்ணம் கொழும்பு தேவைக்குதவும் நண்பர்கள் சங்கத்தினால் (Colombo Friend in Need Society) மேற்கொள்ளப்பட்ட ஒரு தனித்துவம் வாய்ந்த திட்டமாகும். இத்திட்டத்தைச் செயற்படுத்தத் தொடங்கு முன்னதாக எமது நாட்டிலுள்ள உடலூனமுற்ற மக்கள் மருத்துவ, சமூக, பொருளாதார உளவியற் பிரச்சனைகளை எதிர்நோக்கும் அபாக்கியவான்களாக இருந்தனர். உடலூனமுற்றவர்களில் வெளிநாட்டு மருத்துவமனைகளுக்குச் சென்று ஒரு செயற்கை உறுப்பைப் பொருத்தக்கூடிய நிதி வசதி படைத்த அல்லது ஒரு செயற்கை உறுப்பினை இங்கு தருவித்து, அதனைப் பொருத்துவதற்கேற்ற வசதிகளுடைய ஒரு மருத்துவ நிறுவனத்துக்குச் சென்று அதனைப் பொருத்துவித்துக்கொள்ளும் பொருளாதார வசதிகளுடைய உயர்மட்டத்தைச் சேர்ந்த ஒருசிலரைத் தவிர, பெரும்பாலோர் தமது இல்லங்களில் ஒரு துயரமான வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர்; அல்லது இரண்டு ஊன்றுகோல்களின் உதவியுடன் தத்தித் தத்திச் சென்றனர். பொருளாதார வசதியுடைய சிலர் செயற்கை உறுப்பொன்றைப் பெறுவதற்கு அரசாங்க மருத்துவ மனைகளின் உட்குறை மருத்துவக்கூறுகளில் தம்மைப் பதிவுசெய்துவிட்டு செயற்கை உறுப்புக் கிடைக்கும்வரை சக்கர நாற்காலியின் உதவியுடன் நடமாடினர். இலங்கையில் செயற்கையுறுப்புத் தயாரிக்கும் பணி மந்தகதியிலேயே நடைபெற்று வந்தது; தயாரித்தளிக்கப்பட்ட செயற்கையுறுப்பின் கிரயம் மிக அதிகமாகவிருந்தமையால் சாதாரண மக்களால் அதனை வாங்க முடியாமலிருந்தது. இவையெல்லாவற்றுக்கும் மேலாக அச் செயற்கையுறுப்பின் மிகப் பெரிய குறைபாடு, அது மூன்றாம் உலக நாடுகளில் வசிக்கும் அங்கவீனர்களின் அன்றாட வேலைகளுக்குப் பொருத்தமில்லாததாக அமைந்தமையேயாகும். மேல் நாட்டவரின் தொழில்நுட்பத்தையும் பொருள்களையும் இங்கும் பயன்படுத்தியே அவற்றைத் தயாரித்ததால் அது மேலைநாட்டிற் தயாரிக்கப்படும் உறுப்பையொத்தவொன்றாகவே இருந்தது.

இக்கால கட்டத்தில், இந்தியாவிலுள்ள ஜெய்ப்பூர் சாவாய் மான் சிங் மருத்துவ மனையைச் சேர்ந்த புகழ்பூத்த அறுவை வைத்திய நிபுணர் பேராசிரியர் பிரமொட்கரன் செத்தி அவர்களால் "ஜெய்ப்பூர் பாதம்" கண்டுபிடிக்கப்பட்டது. இக்கண்டுபிடிப்பானது றப்பர்ப்பாதத் தயாரிப்பில் ஓர் அரிய சாதனையாகப் போற்றப்பட்டதுடன், அபிவிருத்தியடையும் நாட்டிலுள்ள உடலூனமுற்றவர்க்கு மிகப் பொருத்தமான பாதமாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அப்பாதத்தின் எளிமை, நீண்ட காலம் உழைக்கும் தன்மை, இயற்கையோடொத்த தன்மை, நீர்புகாத்

தன்மை, பயிற்சி பெற்ற உள்ளூர்ப்பணியாளரால் உள்ளூர் மூலப் பொருட்களைக் கொண்டு தயாரிக்கக் கூடியதான இலகுவான எளிய தொழில்நுட்பம், அதனைப் பொருத்துபவர்கள் எப்போதும் எச் சந்தர்ப் பத்திலும் பயன்படுத்தக் கூடியதாகவுள்ளமை என்பன காரணமாக அது மூன்றாம் உலக நாடுகளிலுள்ள மேலைத்தேய தகைமைபெற்ற மருத்து வர்களைக்கூடக் கவர்ந்துள்ளது. அவர்கள் உடலூனமுற்ற தமது நோயா ளர்களுக்கும் அவற்றைப் பொருத்த நாடினர்.

சர்வதேச மானிட உதவித்திட்ட முறையைச் (ஐ. எச். ஏ. பீ.) (**International Human Assistance Programme**) சேர்ந்த திரு. ஸ்ரீபன் எவ். வில்பர் என்பவர் கம்பகா மாவட்டத்திலுள்ள உடலூனமுற்றவர்களின் நன்மை கருதி இந்திட்டத்தை மேற்கொள்ளுமாறு திருமதி. போல் பெரேரா (கொழும்பு, ஜெய்ப்பூர் பாதத் திட்டத்தின் முகாமைச் சபையின் அன் றைய தலைவி) அவர்களுக்கு 1983, யூன் மாதம் கூறியதையடுத்து இலங்கையில் ஜெய்ப்பூர் பாதத்திட்டத்தைச் செயற்படுத்துவது சாத்திய மாகியது. அத்தகையவொரு பாரிய திட்ட முறையைச் செயற்படுத்தி நடத்துவதற்கேற்ற அமைப்பு கொழும்பு தேவைக்குதவும் நண்பர்கள் சங் கமேயாகுமென அவர் கருதியமையால், இத்திட்டத்தை மேற்கொள்ளுமாறு அவர் இச் சங்கத்தைக் கேட்டுக்கொண்டார். அல்லாமலும் உடற் குறை பாடுடையவர்களின் துன்பங்களை நீக்குவதாகிய மிகவுயர்ந்த மானிட சேவையில் ஏற்கெனவே ஈடுபட்டுள்ள ஓர் அமைப்பாக கொழும்பு தேவைக்குதவும் நண்பர்கள் சங்கம் விளங்கியது.

அந்த யோசனையை ஏற்றுக்கொண்ட இச்சங்கம் அதனை நடை முறைப்படுத்தும் பணியை (கொழும்பு தேவைக்குதவும் நண்பர்கள் சங் கத்தின் அந்நாள் செயலாளராகிய) திருமதி ஸ்வர்ணா பர்டினன்ட் என் பவரிடம் ஒப்படைத்தது. அவர் இத்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்து பயன்தரச்செய்ய நம்பிக்கைகளுக்கும் ஏமாற்றங்களுக்குமிடையே இரண்டரை ஆண்டுகளாக கடுமையாக உழைத்தார். அவர் தம்மை இப் பணிக்கென முற்றுமுழுதாக அர்ப்பணித்து உழைத்தவிதமும், இத்திட்ட முறைக்கு அவர் அளித்த விளம்பரமும் அரசின் பொருத்தமான அமைச் சுக்கள், அரச மற்றும் தனியார் துறைகள், அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள், செய்தித்தாள்கள், விளம்பர ஊடகங்கள், வெளிநாட்டி லுள்ள இலங்கைத் தூதரகங்கள், வெளிநாட்டிலுள்ள அவைகள், நிதி வழங் கும் முகவராண்மைகள், மருத்துவத்துறை ஆகியவற்றை இந்த அதிசய திட்ட முறையை வெற்றிகரமாக வளர்த்தெடுப்பதற்கு உற்சாகத்துட னும் நம்பிக்கையுடனும் ஈடுபடச் செய்தது.

இத்திட்டத்திற்கான பட்டறையொன்று, கொழும்பு 2, சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, இல 171 இல் நிறுவப்பட்டது. திட்டச் செயற்பாடுகளுக்கு வேண்டிய சகல வசதிகளையும் இயந்திரங்களையும் அதுகொண்டுள்ளது. இங்கு இத்திட்டம் உருவாகி வளர்ச்சியுற்ற காலத்தில் ஒரு பிரசித்திபெற்ற அமெரிக்க செயற்கையுறுப்பிணைப்பாளரும் ஜெய்ப்பூர் பாதத் தொழில் நுட்பவியலை ஐயந்திரிபறப் பயின்றவருமான திரு. றொபேட் சிங்கர் என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவர் திருமதி ஸ்வர்ணாவிற்கு ஒரு நல்ல நண்பராகவும் வழிகாட்டியாக வும் திகழ்ந்தார். பயிற்சி பெறும் பொருட்டுத் தொழில்நுட்பவியலாளர்கள் ஜெய்ப்பூருக்கு அனுப்பப்பட்டனர். ஆரம்பத்தில் பாதப் பாகங்கள் அங்கிருந்தே தருவிக்கப்பட்டன. இத்திட்டத்தில் அக்கறை கொண்டவர்கள், இதற்கு நிதி சேகரிப்பதற்காக அறநோக்க உணவுக்காட்சிகள், காலைக் காப்பி விருந்துகள், குழு நடனங்கள், படக் காட்சிகள், சீட்டிழுப்புக் கள் போன்ற நயப்புடைய பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தினர். பணம் மற்றும் பொருள் நன்கொடைகளும், ஜெய்ப்பூர் உறுப்புக்கான செலவைப் பொறுப்பேற்கும் தனிநபர் விருப்பங்களும் மெதுவாக ஆனால் நிதானமாகக் கிடைக்கத் தொடங்கின. இலங்கையிற் செயற்படுத்தப்படும் ஜெய்ப்பூர்ப் பாதத் திட்ட முறை நிச்சயமாக வெற்றியளிக்குமென்பது வெளிப்படை யாகப் புலனாகியது. 1985 ஒகஸ்ட் மாதத்தில் முதன்முதலாகப் பூரணமான "ஜெய்ப்பூர் உறுப்பு" தயாரிக்கப்பட்டு, ஒரு வீதி விபத்தில் பாதிக்கப் பட்ட சிறிலால் சிறிகுமர எனும் இளைஞனுக்குப் பொருத்தப்பட்டது. புதி தாகப் பொருத்தப்பட்ட உறுப்புடன் அவ்விளைஞன் நம்பிக்கையுடன் நடக் கத் தொடங்கியபோது இத்திட்டத்தில் ஈடுபட்ட அனைவருக்கும் தமது கனவுநனவாகியதுபற்றி மகிழ்ச்சியும் பெருமிதமும் ஏற்பட்டது.

மேலும் மேலும் நிதி உதவி கிடைக்கத் தொடங்கியதும் பட்டறை அதன் செயற்திட்டங்களை விரிவுபடுத்தியது. போலியோ நோயினால் பாதிக் கப்பட்டவர்களுக்கு சேவை செய்யவும், மற்றும் உற்குறைவுத் தேவைப் பாடுகளை நிறைவேற்றவும் தனியான 'ஓர்தோற்றிக்' (Orthotic) பகுதி யொன்று அமைக்கப்பட்டது. கண்டி அரச மருத்துவமனையிலுள்ள உடற் குறைவுத் தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்யும் பட்டறைக்கு உதவி நல் கும் நோக்குடன் ஜெய்ப்பூர் திட்டத்தின் பட்டறையின் கிளையொன்று கண்டியிற் திறந்து வைக்கப்பட்டது. இனக்கலவரம் மூண்டதைத் தொடர்ந்து நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக உடலூ னமுற்றோரின் எண்ணிக்கை மிகக்கூடியது. பெருகி வரும் தேவைக்கு ஈடு கொடுப்பதற்காக பாத உற்பத்தியைப் பட்டறை துரிதப்படுத்த வேண்டி யேற்பட்டது. இதற்கிடையில் வடக்கில் நிலைமை இடா நிறைந்ததாகி யது. இயற்கைக் காரணிகளால் உடல் ஊனமுற்றோரின் தொகையுடன் இராணுவ நடவடிக்கைகளால் அங்கங்களை இழந்தோர் தொகையும் பல் கிப் பெருகியது.

குண்டு வெடிப்புக்கள், எறிகணைகள், கண்ணி வெடிகளினால் ஊன மடைந்த ஏதுமறியாத குடிமக்களின் பரிதாபநிலை யாழ்ப்பாணம் அன்னை யர் முன்னணியின் இரக்கபூர்வமான கவனத்தை ஈர்த்தது. உடலூனமுற்றவ ரொருவர் ஜெய்ப்பூர் உறுப்பொன்றைப் பொருத்துவதற்காக கொழும்புக் குப் பயணம் செய்வது உண்மையிலேயே மிகமிகக் கடினமானதாயிருந்தது. ஆக்கபூர்வமாக ஏதேனும் செய்து தமது குழந்தைச் செல்வங்களை உடலூ னமடைவதிலிருந்தும் அதன் உள்ளத் தாக்கத்திலிருந்தும் காப்பாற்ற ஓராண் டுக்கு மேலாக பயனின்றி போராடிய பின், நோராட்டை (NORAD) (நோர் விஜிய அரச தூதரக அபிவிருத்திக் கூட்டுறவைச்) சேர்ந்த திரு. ஜோண் ஹச்சிஸனின் யாழ் வருகை நம்பிக்கை ஒளி ஊட்டுவதாயிருந்தது. அவர் உட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லூனமுற்றோர் சிலருக்கு கொழும்பில் ஜெய்ப்பூர் உறுப்புக்களைப் பொருத்து வதற்கு வேண்டிய உதவியையும் ஒழுங்குகளையும் செய்தது மட்டுமன்றி, ஜெய்ப்பூர் பாதத்திட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடைமுறைப் படுத்துவது சாத்தியமென கொழும்பு தேவைக்குதவும் நண்பர்கள் சங்கத்தைச் சேர்ந்த திருமதி ஸ்வர்ணா பர்டினன்ட் கருதுவரானால் அத்தகைய ஒரு திட்டத்தை யாழ்ப்பாணத்திற் செயற்படுத்தவும் உதவி வழங்க முன்வந்தார்.

யாழ்ப்பாணம் அன்னையரும் முன்னணியினரும் யாழ்ப்பாணப் பொது மக்களும் 1986 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 06 ஆம் தேதியன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றவொரு பொதுக்கூட்டத்தில் திருமதி ஸ்வர்ணா பர்டினன்ட்டுக்கு வரவேற்பளித்தனர். அவர்கள் இத்திட்டத்திற்குத் தம் ஒத்துழைப்பையும் உச்ச ஆதரவையும் நல்குவதாகவும் உறுதியளித்தனர். இவ்வரவேற்பினால் உந்தப்பட்டும் பொதுமக்கள் வெளிக்காட்டிய உணர்வினாலும் மனமிசைந்த திருமதி ஸ்வர்ணாயாழ்ப்பாணத்தில் அத்திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்த சம்மதமளித்தார் அதனைத் தொடர்ந்து 250,000/– ரூபாவை அன்பளிப்பாக நோராட் வழங்கியது; ஆரம்பச் செலவுகள் அதாவது திட்டத்திற்குரிய தலைமையகத்தையும் பட்டறையையும் அமைக்க ஒரு வீட்டைக் குத்தகைக் கெடுத்தல், கட்டடத்தைத் திருத்துதல் கருவிகள், உபகரணங்கள், மூலப்பொருட்கள், தொழில்நுட்பவியலாளர்களைப் பயிற்றுதல், கொழும்புப் பட்டறையில் ஒரு வேலை முகாமையாளரை பயிற்சி பெறச் செய்தல் முதலியனவற்றுக்கான செலவுகள் அனைத்துக்கும் இத்தொகை போதுமானதாகவிருந்ததுடன் நாளாந்தச் செலவுக்கும் பணம் மீதியாகவிருந்தது. மேலும் மேலும் கிடைத்த நிதி உதவியுடன் இத்திட்டம் 1987 யூலை மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது கொழும்பு தேவைக்குதவும் நண்பர்கள் சங்கத்தின் யாழ்ப்பாணக்கிளையை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைப்பதற்கும், யாழ்ப்பாணம், சுண்டிக்குளி, பழைய பூங்காவீதி, இல 05இல் அமைந்துள்ள பட்டறையைத் தொடங்கி வைப்பதற்குமாக திருமதி ஸ்வர்ணா ஒகத்துமாதம் மீண்டும் வருகை தந்தார். திறப்புவிழா வைபவம் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. யாழ்ப்பாணம் ஜெய்ப்பூர் பாதத்திட்டத்தின் ஆரம்ப காலத்திலிருந்து இன்றுவரை அது திருப்திகரமாக முன்னேறி வருவதுடன் அது நிறுவப்பட்டதன் நோக்கத்தையும் நிறைவேற்றி வைக்கிறது. சர்வதேச குறைப்பாட்டுப் பட்டறையை (Handicap International Workshop) இத்திட்டப் பணிமனை வளவுக்குள் அமைத்தமை இத்திட்டத்திற்கு ஒரு வரப்பிரசாதமாகும். இதனால் யாழ்ப்பாணத்திலுள்ள உடலூனமுற்றவர்களின் இதனோடிணைந்த ஏனைய தேவைகளையும் நிறைவேற்றக் கூடியதாகவிருந்தது

கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இத்திட்டம் பெற்ற செல்வாக்கும், அது வெற்றிகரமாகச் செயற்படுவதும் தெற்கு வாழ் மக்களின் கவனத்தையும் ஈர்த்தது. காலி மருத்துவமனையைச் சேர்ந்த பேராசிரியர் நீல் பொன்சாகா என்பவர் காலியைச்சேர்ந்த புகழ் பூத்த கொடைவள்ளல் திரு. பி. ஆர். திஸநாயக்கா என்பவரை கொழும்புப் பட்டறைக்கு ஒருமுறை அழைத்து வந்தார். அப்பட்டறை வழங்கும் அர்ப்பணிப்புடன் கூடிய சிறந்த மானிட சேவையால் கவரப்பட்ட அவர் உடனடியாக காலியில் ஒரு பட்டறையை அமைத்து கருவிகளையும் இயந்திரங்

களையும் பொருத்த அக்கணமே முன் வந்தார். 1988, மே மாதம் 28ந் தேதியன்று அப்பட்டறை சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இலங்கையிற் செயற்படுத்தப்படும் ஜெய்ப்பூர் பாத திட்ட முறையானது உடல் ஊனமுற்றவர்களின் ஆக்க நலனுக்குப் பரிந்து செயலாற்றுவதாலும் சேவையையே அதன் உயர்ந்த இலட்சியமாகக் கொண்டுள்ளமையாலும் உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ளது. இன்று பங்களாதேசம், தாய்லாந்து, லாவோஸ், இந்தோனேசியா, மலேசியா, மெக்சிகோ, ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், தன்சானியா, ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகள் தங்களுக்குத் திட்டக் கருத்துக்கள், மதிப்பீடுகள் என்பவற்றைத் தந்துதவுமாறு இத்திட்ட முறைக்குப் பல வேண்டுகோள்களை விடுத்துள்ளன. கொழும்பு தேவைக்குதவும் நண்பர்கள் சங்கமானது அவற்றின் வேண்டுகோள்களுக்கிணங்கியதோடு மட்டுமன்றி, தொழில் நுட்பவியலாளர் அனைவர்க்கும் கொழும்பு நிலையத்தில் இலவசப் பயிற்சியை அளிக்கவும் முன் வந்துள்ளது. இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் ஜெய்ப்பூர் பாதத் திட்ட முறையானது தேசிய மட்டத்தில் வெற்றி உறுதியான நிலையில் சர்வதேச புகழ் மற்றும் நிதி உதவிகளுடனும், ஜெய்ப்பூர் பாதத்தைக் கண்டுபிடித்த மேதையின் முறையான அறிவுரைகளுடனும் நல்லாசிகளுடனும், உடல்ஊனமுற்றவர்களுக்கு அங்கப் புனரமைப்பு மட்டுமன்றி பொருளாதார ரீதியிலும் முழுமையானதோர் புனர்வாழ்வை அளிப்பதை இலட்சியமாகக் கொண்டு, அவ் இலக்கை நோக்கி வீறு நடை போடுகின்றது.

( எமது ஐந்தாவது ஆண்டு மலரில் வெளிவந்த கட்டுரை இது )

**திருமதி திலகா யோகநாதன்**

# ஜெய்ப்பூர் செயற்கைக் கால் திட்டம்
## (கொழும்பு நட்புறவுச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளை.)

**நிர்வாகப் பிரிவு:**

திரு. என். சிவநாதன் — நிர்வாகச் செயலாளர்
திரு. பி. பாலேந்திரன் — கணக்கியல் உத்தியோகத்தர்
திரு. ஆர். சண்முகநாதன் — களஞ்சிய காப்பாளர் / திட்ட உத்தியோகத்தர் (புனர்வாழ்வு)
திருமதி. ஜே. ரட்ணவேணி — தட்டெழுத்தாளர் / லிகிதர் / புனர் வாழ்வுப் பணியாளர்
செல்வி ரி. தமயந்தி — வரவேற்பாளர் / மருத்துவ உதவி யாளர் / புனர்வாழ்வுப் பணியாளர்
திரு. எம். என். கனகரட்ணம் — சாரதி
திருமதி. ரி. ரெஜினா — சமையல் செய்பவரும் விடுதி மேற்பார்வையாளரும்
திரு. என். உமாச்சந்திரன் — காவலாளி (1998ம் ஆண்டு ஜூன் மாதம் வரை)
திரு. என். மாணிக்கராஜா — பாதுகாப்பு உத்தியோகத்தர் (1998ம் ஆண்டு டிசம்பர் மாதம் தொடக்கம்)

**தொழில்நுட்பப் பிரிவு**

திரு. எக்ஸ்.எஸ்.வை. பிரான்சிஸ்— தொழில் முகாமையாளர் / இணைப்பு உத்தியோகத்தர்
திரு. எல். ஜோன்சன் — சிரேஷ்ட தொழில்நுட்பவியலாளர்
திரு. பி. பரமகுமார் — தொழில்நுட்பவியலாளர்
திரு. பி. விஜயகுமார் — தொழில்நுட்பவியலாளர்
திரு ஜி. பிரேந்திரா — தொழில்நுட்பவியலாளர் (98ம் ஆண்டு ஜூன் மாதம் வரை)
திரு. ரி. ரவீந்திரன் — தொழில்நுட்பவியலாளர்
திரு. ஜி. கிரிதரன் — தொழில்நுட்பவியலாளர்
திரு. என். நோயல் குரூஸ் — தொழில்நுட்பவியலாளர்
திரு. வை. திலீபன் வில்சோ — தொழில்நுட்பவியலாளர்
செல்வி. எஸ். சுகந்தி — புனர்வாழ்வுப் பணியாளர்
திரு. என். கனகசாந்தி — பகுதிநேர புனர்வாழ்வுப் பணியாளர் (1998ம் ஆண்டு ஜூலை மாதம் வரை)
திரு. எஸ். ஏ. கே. பிலிப்ஸ் — தொழில்நுட்பவியலாளர் பயிலுனர் (1998ம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவரின் செய்தி

"நாம் வந்த போது இருந்ததை விட சிறந்த இடமாக இந்த உலகை விட்டுச் செல்ல வேண்டும்". என்பதே சான்றோர்களது விருப்பமாகும். காலத்தின் இன்றைய கட்டாய தேவையாக வளர்ச்சிபெறும் யாழ் ஜெய்ப்பூர் செயற்கைக்கால் நிறுவனம் பல சோதனைகளையும் கடந்து 11 வது ஆண்டு நிறைவை பூர்த்தி செய்வதையிட்டு அகமகிழ்வடைகின்றேன்.

சாதாரண மக்களே அவநம்பிக்கையும், அதைரியமும் கொண்டுள்ள இன்றைய சூழ்நிலையிலே அங்கவீனப்பட்டோரது வாழ்வில் நம்பிக்கையையும் தைரியத்தையும் ஏற்படுத்துவதென்பது சாதாரண விடையமன்று. ஆயினும் வலு இழந்தோரது நம்பிக்கை நட்சத்திரமாக இந் நிறுவனம் பலரது பயன்கருதாப் பணி மூலம் உயர்வடைந்து நிற்பது கண்டு மனித மாண்பு காணவிளைவோர் நிச்சயமாக மகிழ்வுறுவர்.

இடம்பெயர்வின் பின் 1996ம் ஆண்டின் நடுப்பகுதியோடு மட்டுப் படுத்தப்பட்ட அளவில் தொழிற்பட ஆரம்பித்த இந் நிறுவனம் தனது பணியை பெருமளவு விரிவு படுத்தவேண்டிய சூழ்நிலை தொடர்வதை வேதனையுடன் குறிப்பிட வேண்டியுள்ளது.

பாலர் முதல் முதியோர் வரை அங்கவீனமாகும் மக்களது தொகை அண்மைக்காலமாக அதிகரித்துச் செல்லும் நிலை தொடர்கின்றது. இதிலிருந்து தம்மைப் பாதுகாக்கும் விழிப்புணர்வும், தற்காப்பு அறிவு நிலையும் மக்களிடையே மேலும் ஏற்பட பலரும் முயலவேண்டும் என்பதையும் சுட்டிக்காட்டல் நமது சமூகக்கடமையாகிறது.

நிறுவன வளர்ச்சிக்கு உதவும் வகையில் நன்கொடைகள் அதிகரிப்பது மகிழ்ச்சியை தருகின்றது. ஆயினும் பொருட்களை பெறுவதில் உள்ள போக்குவரத்துப் பிரச்சனைகளும் சந்திக்கும் இடர்பாடுகளும் தொடர்வதை குறிப்பிட வேண்டியே உள்ளது.

எனவே இந் நிறுவனத்தினதும் பங்கு பணிகள் அதிகரித்துச் செல்ல வேண்டிய சூழலும், அதன் தேவை முன்னெப்போதும் இல்லாத அளவு மக்களால் உணரப்படும் நிலையும் உண்மையில் ஆரோக்கியமானதோ அன்றி மன நிறைவைத்தருவதோ அன்று என்பதை யாவரும் உணர்வர். மக்கள் அங்கவீனமாகும் இத் துர்ப்பாக்கிய நிலை தொடராதிருக்க இறையருளை இறைஞ்சுவதோடு பாதிக்கப்படும் மக்கள் பணியில் பங்குகொண்டு அவர் தம் வாழ்வில் ஒளியேற்ற அனைவரது ஒத்துழைப்பையும் உதவிகளையும் வேண்டி நிற்கின்றேன்.

**திருமதி லங்கா சிவராமலிங்கம்**
தலைவர்
யாழ். ஜெய்ப்பூர் செயற்கைக்கால் திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு நட்புறவுச் சங்கத் தலைவரின்

## வாழ்த்துச் செய்தி

கொழும்பு நட்புறவுச் சங்க யாழ்ப்பாண கிளையின் பதினொராவது ஆண்டு நிறைவையொட்டி வாழ்த்துச் செய்தி ஒன்றை பணிவுடன் அனுப்பி வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

பல இன்னல்களுக்கு மத்தியிலும் யாழ் கிளையின் பணியாளர்களும் முகாமைத்துவ குழுவினரும் தமக்கு இடப்பட்ட பாரிய பொறுப்பினை கருணை நிறைந்த உள்ளத்துடனும் துணிச்சலுடனும் பல வருடங்களாக செயற்படுத்தி வருவதனைப் பார்த்து நான் அக மகிழ்வடைகின்றேன்.

அவயவங்களை இழந்தவர்களில் பலர் வறுமையில் வாடும் விவசாயிகளையும், மாணவர்களையும் உள்ளடக்கிய பிரஜைகளாகவே காணப்படுகின்றனர். இவர்களுக்கு நிர்வாக உறுப்பினர்களும் பணியாளர்களும் தங்கள் நேசக் கரம் நீட்டுவதனை நான் அறிவேன்.

தொழில் முகாமையாளர் திரு. எக்ஸ். எஸ். வை. பிரான்சிஸ் எனது அலுவலகத்தில் சந்தித்து செயற்கைக் கால் உற்பத்திக்கு தேவையான அலுமினியம் தட்டுப்பாடாக இருந்த கால கட்டத்தில் மருத்துவ மனையில் பாவிக்க முடியாத பெரிய அலுமினிய பாத்திரங்களை சேகரித்து செயற்கைக்கால் தயாரித்தது பற்றிக் கூறிய போது அவர்களின் பொறுப்புணர்வை எண்ணி எனது கண்களிலிருந்து நீர் பெருக்கெடுத்தது. இந்த பணியாளர்களின் ஆத்ம நேயத்தை எண்ணி பெருமைப்படுகின்றேன். சிதறிய அவயவத்தை மட்டுமன்றி மனத்தையும் சகவாழ்வுக்கு கட்டியெழுப்பும் உயர்ந்த கடமையில் ஈடுபட்டுள்ள யாழ் கிளையின் எல்லா முயற்சியும் வெற்றியடைய வாழ்த்துகின்றேன்.

(ஒப்பம்) **கல்யாணி ரணசிங்க**
தலைவர்
கொழும்பு நட்புறவுச் சங்கம்.

# மீளாய்வு அறிக்கை 1997 - 1998

கடந்த 1997ம் ஆண்டு ஜூலை மாதம் தொடக்கம் 1998ம் ஆண்டு டிசம்பர் மாதம் உள்ளடங்கிய காலப்பகுதியின் மீளாய்வு அறிக்கையை சமர்ப்பிப்பதில் நாங்கள் பெருமகிழ்வடைகின்றோம். பத்தாம் ஆண்டு நிறைவையொட்டி பிரசுரித்த மலரில் கடந்த பத்தாண்டு செயற்பாட்டை வெளியிட்டிருந்தோம். பதினொராம், பன்னிரெண்டாம் ஆண்டு காலப் பகுதியில் ஊனமுற்றோருக்கான சேவையினால் அவர்களடைந்த நன்மைகள் அதிகரித்தது மட்டுமன்றி எமது நிறுவனமும் விருத்தியடைந்துள்ளது. இக் காலப்பகுதியில் முகாமைத்துவ குழு அங்கத்தவர்களில் யாழ்ப்பாணத்தில் இருந்தோர் குறைந்த எண்ணிக்கையினரே. இதனால் எமது திட்ட வேலைகளை நிறைவேற்றுவது கடினமாகவே அமைந்தது. எனினும் எமது நிறுவன தலைவியான திருமதி. ல. சிவராமலிங்கம் உள்ளிட்ட இங்கிருந்த முகாமைத்துவ குழு, பணியாளர்களது ஒத்துழைப்புடனும் நலன்விரும்பிகள், பிரதான நன்கொடையாளிகள் ஆகியோரின் அனுசரணையுடனும் குறிப்பிட்டுக் கூறக்கூடியளவு எமது சேவையை திறம்பட நடாத்தியுள்ளோம். எமது திட்டப் பணிப்பாளர் திருமதி. தி. யோகநாதன் தனது வெளிநாட்டுப் பயணத்துக்குஇடைப்பட்ட காலமான 1996ம் ஆண்டிலிருந்து 1998ம் ஆண்டு வரையில் கொழும்பில் இருந்த போது எங்கள் செயற்திட்டத்துக்கு பல வழிகளிலும் உதவி புரிந்தார். மூலப் பொருள்களை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் அனுப்புவதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறுவதற்கு எமது இணைப்பு உத்தியோகத்தருக்கு உறுதுணையாக இருந்தார். அது மட்டுமன்றி அமெரிக்காவிலமைந்துள்ள போர் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்குதவும் நிறுவனத்திற்கு எமது யாழ்ப்பாண அன்றைய நிலமையையும் நாம் எதிர்பார்க்கும் பண உதவி பற்றியும் எடுத்துக் கூறியிருந்தார். அத்துடன் யு. எஸ். எட்ஸ் நிறுவனம் கொழும்பு நட்புறவுச் சங்கத்துடன் இணைந்து நடாத்திய கூட்டங்களுக்கு யாழ் கிளையின் சார்பில் பங்கு பற்றிய முக்கிய விடயங்களை அங்கு எடுத்துச் சொன்னார். எங்கள் திட்டமிடல் காரியதரிசி டாக்டர் (திருமதி) ஜெ. கணேசமூர்த்தியும் இந்த இணைப்புக் கூட்டங்கள் சிலவற்றில் பங்கு பற்றினார்

கௌரவ பொருளாளர் டாக்டர். (திருமதி) செ. தெய்வேந்திரன் எங்கள் தாய்ச் சங்கமான கொழும்பு நட்புறவுச் சங்க நிர்வாக செயலாளர் திருமதி ரூபா ஜெயசேகராவையும், யு. எஸ் எய்ட். உதவி நிறுவன திட்டமிடல் முகாமையாளர் திருமதி ராணி சாமுவேலையும் அண்மையில் சந்தித்து நாங்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளையும், எமது கிளையால் வழங்கப்பட்ட சேவைகள் பற்றியும் கலந்துரையாடினார். இக் கலந்துரையாடல் சுமுகமாகவும் பரஸ்பரம் புரிந்துணர்வையும் வளர்க்க உதவியது. இந்தச் சந்திப்பு நாம் தலைசிறந்த செயல்களைப் புரிவதற்கு ஊன்று கோலாக அமைந்தது. எங்களுக்கு தொடர்ந்தும் உதவி செய்வதாக உறுதியளித்தது மட்டுமன்றி அதனை செயற்படுத்தியுமுள்ளார்கள். அவர்களின் புரிந்துணர்வுக்கும் ஒத்துழைப்புக்கும் நன்றி செலுத்துகிறோம். இனிவருகின்ற ஆண்டுகள் நற் பயனளிக்கும் ஆண்டாக மலர வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேற் குறிப்பிட்ட காலப்பகுதியில் கீழே குறிப்பிடப்படும் உத்தியோகத்தர்கள் புதிதாக எமது செயற்திட்டத்தில் இணைந்துள்ளனர்.**

| | | | |
|---|---|---|---|
| 01. | திரு. என். சிவநாதன் | — | நிர்வாக செயலாளர் |
| 02. | திரு. ஆர். சண்முகநாதன் | — | களஞ்சிய காப்பாளர் / திட்ட உத்தியோகத்தர் (புனர்வாழ்வு) |
| 03. | திரு. ஜி. பிரேந்திரா | — | தொழில்நுட்பவியலாளர் |
| 04. | திரு. ஜி. கிரிதரன் | — | தொழில்நுட்பவியலாளர் |
| 05. | செல்வி. ரி. தமயந்தி | — | வரவேற்பாளர் / மருத்துவ உதவியாளர் |
| 06. | செல்வி. எஸ். சுகந்தி | — | புனர்வாழ்வு பணியாளர் |
| 07. | திரு. என். நோயல் குரூஸ் | — | தொழில்நுட்பவியலாளர் |
| 08. | திரு. வை. திலீபன் வில்சோ | — | தொழில்நுட்பவியலாளர் |
| 09. | திரு. எஸ். ஏ. கே. பிலிப்ஸ் | — | தொழில்நுட்பவியலாளர் (பயிலுனர்) |
| 10. | திரு. என். ஏ. மாணிக்கராஜா | — | பாதுகாப்பு உத்தியோகத்தர் |

**மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் கீழே குறிப்பிடப்படும் உத்தியோகத்தர்கள் எமது செயற்திட்டத்திலிருந்து விலகியுள்ளார்கள்.**

| | | | |
|---|---|---|---|
| 01. | திரு. என் ஜீவேஸ்வரா | — | திட்டமிடல் உத்தியோகத்தர் (புனர்வாழ்வு) |
| 02. | திரு. கே. ரவீந்திரராஜா | — | வரவேற்பாளர் / மருத்துவ உதவியாளர் |
| 03. | திரு. பி. தர்மராஜா | — | தொழில்நுட்பவியலாளர் |
| 04. | திரு. என். உமாச் சந்திரன் | — | காவலாளி |
| 05. | திரு. ஜி. பிரேந்திரா | — | தொழில்நுட்பவியலாளர் |

எமது செயற்திட்டத்தில் புதிதாக இணைந்த உத்தியோகத்தர்களை மகிழ்ச்சியுடன் வரவேற்பதுடன் அவர்களது சேவையால் நிறுவனம் மேலும் வளரவும். சேவையிலிருந்து விலகியவர்களின் எதிர்காலம் சுபீட்சமாக அமையவும் வாழ்த்துகின்றோம்.

## இயன் மருத்துவப் பிரிவு

யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரினதும் இயன் மருத்துவரினதும் அனுசரணையுடன் எமது நிறுவன புனர் வாழ்வு பணியாளர்களான திருமதி. ஜெ. இரட்ணவேணியும், செல்வி எஸ் சுகந்தியும் இயன் மருத்துவ பயிற்சி பெற்றார்கள். பின்னர் இவர்கள் எமது இயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவ பிரிவில் தொழில் முகாமையாளரான திரு. எக்ஸ் எஸ். வை. பிரான்சிஸ் அவர்களிடம் இயன் மருத்துவம் சம்பந்தமான பயிற்சியைப் பெற்றனர். இயன் மருத்துவ பிரிவை மேலும் வலுப்படுத்தும் நோக்கத்துடன் உபசரிப்பாளரும் மருத்துவ உதவியாளருமான செல்வி த. தமயந்திக்கு இயன் மருத்துவம் சம்பந்தமான பயிற்சி வழங்கப்பட்டது. இதன் மூலம் இயன் மருத்துவ சேவையை மேலும் விரிவுபடுத்கூடியதாக அமைந்தது. அங்கம் பொருத்தியோர்க்கு மட்டுமன்றி உடல் பிடிப்பு, மூட்டுவலி, தசைப்பிடிப்பு மற்றும் போலியோவின் தாக்கத்துக்கு உள்ளானோர்க்கும் இயன் மத்துவசேவை தேவைப்படும் சகலருக்கும் எமது சேவையை வழங்கி வருகின்றோம். இயன் மருத்துவ பிரிவுக்கு தேவையான நவீன உபகரணங்களை நாம் கொண்டிருப்பதனால் எமது சேவையை திறம்பட நடாத்த முடிகின்றது. இவ்வகையில் எமது நிறுவனத்தால் வழங்கப்படும் இயன் மருத்துவ சேவையையொத்த சேவை யாழ்ப்பாணதில் இல்லை என்று கூறுவது மிகையாகாது.

**அவயவங்களை வழங்குதல்**

செயற்கை அவயவங்களை உற்பத்தி செய்வதற்கு தேவையான மூலப் பொருள்களை நாம் கொள்வனவு செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதியை பெறக்கூடியதாக இருந்தது. இதனால் கொழும்பிலிருந்து தருவிக்கப்பட்ட தரமான மூலப் பொருள்களைக் கொண்டு விருத்தியடைந்த தொழிநுட்ப முறையை பயன்படுத்தி தரமான செயற்கை அவயவங்களை உற்பத்தி செய்து வழங்க முடிகிறது. இவ்வாறு தரமான அவயவங்களை உற்பத்தி செய்வதன் மூலம் குறித்த பிரிவு சிறப்பான ஒன்றாக விளங்குகிறது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமானது தனது நல்லெண்ணத்தையும், ஒத்துழைப்பையும் வெளிப்படுத்தும் நோக்கத்துடன் 15. கே. வி. வலுவுள்ள மின் பிறப்பாக்கி ஒன்றை எமது செயற்திட்டத்துக்கு வழங்கியுள்ளது இதனால் தற்போது ஏற்படுகின்ற மின்சார தடங்களை நிவர்த்தி செய்வதோடு எமது தொழிற்சாலை வேலைகளும் தடையின்றி இயங்க ஏதுவாக அமைகிறது.

## ஒர்தோரற்றிக் பிரிவு

ஊனமுற்றோருக்கு தேவையான முச்சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள், ஊன்றுகோல்கள், நடைதாங்கிகள் போன்றவற்றை நாம் உற்பத்திச் செய்து வழங்கி வருகின்றோம். இதனை உற்பத்தி செய்து வழங்குவதற்கு தேவையான கருவிகளை கொழும்பிலிருந்து தருவித்து உற்பத்தியினை மேற் கொள்ளுவதனால் தரமான முறையிலும் நியாயமான உற்பத்திச் செலவிலும் அவற்றை உற்பத்தி செய்ய முடிகின்றது. எங்கள் தொழில்நுட்பவியலாளர்களின் ஆற்றலாலும், ஆர்வத்தாலும் குறுகிய காலத்தில் இவற்றை உற்பத்தி செய்து வழங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிகின்றது. இதனால் எமது பயனாளிகள் திருப்தியடைவது கண்டு நாம் பெருமிதம் கொள்கின்றோம். இதுவரை நாம் உற்பத்தி செய்து வழங்கிய உற்பத்திகள் தொடர்பான புள்ளி விபரங்கள் இப்பிரசுரத்தின் வேறு இடத்தில் குறிப்பிட்டுள்ளோம்.

## புனர் வாழ்வுத் திட்டம்

செயற்கை அவயவங்களை பொருத்தியோருக்கு எங்களால் வழங்கப்படும் நிதியுதவியை இவ்வருடம் அதிகரிக்கக் கூடியதாக இருந்தது. இக் கடனானது வட்டியில்லாத சுழற்சி முறையிலமைந்த கடனாக அமைகின்றது. இதனால் செயற்கை அவயவங்களை பொருத்தியோர் சுய தொழில் முயற்சி மூலம் தமது வருமானத்தை அதிகரித்து பொருளாதார ரீதியில் முன்னேற்றம் அடையவும் இது உதவியது. இந்த கடன் திட்டத்தால் சமூக சேவை அமைப்புகளில் பெருமளவில் தங்கியிருந்த பலரது நிலையை மாற்றக் கூடியதாக இருந்தது. அதுமட்டுமன்றி செயற்கை அவயவம் பொருத்திய மாணவ சிறார்கள் தங்களது கல்வியை தடையின்றி தொடர்வதற்கு உதவியாக மாதாந்தம் உதவிப் பணமும் வழங்கப்படுகின்றது.

## அபிப்பிராயங்கள்

சென்ற வருடம் எங்கள் சமூகத்திலுள்ள ஊனமுற்றோருக்கு தரமான சேவையை வழங்கக் கூடியதாகவும் உற்பத்தித் திறனை மேம்படுத்தக் கூடியதாகவும் இருந்தது. இதனால் எங்கள் உற்பத்தி இலக்கை அடையக் கூடியதாக இருந்தது. கடந்த காலப்பகுதியில் ஏற்பட்ட பெரும் இடப்பெயர்வின் காரணமாக வன்னி சென்ற பல அவயவம் இழந்தோர் அங்கு பல்வேறு காரணங்களால் அவயவம் இழந்தோர். போக்குவரத்து சேவை சீரின்மையால் இங்கு வந்து செயற்கை அவயவம் பொருத்த முடியாதுள்ளமை வருந்தத்தக்க ஒன்றாகும். இவர்களுக்கான போக்குவரத்து சேவை திருப்திகரமான ஒன்றாக அமையும் போது அவர்களும் எமது சேவையால் நன்மையடையக் கூடியதாக இருக்கும்.

## எமது நன்றிகள்

எமது நிறுவன செயற்பாட்டை வெற்றிகரமாக முன்னெடுத்து செல்வதற்கு யாழ் அரச நிர்வாகத்தினர், கொழும்பிலுள்ள எமது தாய்ச் சங்கம், பிரதான நன் கொடையாளிகள் நண்பர்கள், நலன்விரும்பிகள், எல்லோருக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம். எல்லோரது உதவியும் ஒத்தாசையும் எதிர் வரும் காலங்களிலும் கிடைக்கவேண்டும் என தயவாக எதிர்பார்க்கின்றோம்.

**கொழும்பு நட்புறவுச் சங்க யாழ் – கிளை முகாமைத்துவ குழு**
(ஜெய்ப்பூர் செயற்கைக் கால் திட்டம்)

# திட்டமிடல் செயலாளரின் அறிக்கை

கொழும்பு நட்புறவுச் சங்கத்தின் யாழ் கிளையான ஜெய்ப்பூர் கால் திட்டத்தின் 1997 - 1998 ம் ஆண்டுக்கான அறிக்கையை சமர்ப்பிப்பதில் நான் அகமகிழ்ச்சியடைகின்றேன். வடக்கில் ஊனமுற்றோருக்காக மனிதாபிமான முறையில் நாங்கள் வழங்கிவரும் சேவை தனது 12 வது ஆண்டினை பூர்த்தி செய்கின்றது.

அவயவங்களை இழந்தோரில் அனேகமானோர் 11 – 30 வயதுக்கு உட்பட்டவர்களாகவும், மிதி வெடியின் தாக்கத்தால் அங்கவீனராக்கப் பட்டவராகவுமே காணப்படுகின்றனர். ஜெய்ப்பூர் கால் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இன்றுவரை 1911 செயற்கை அவயவங்களை பொருத்தியுள்ளது. ஏனையவர்கள் போல் ஊனமுற்றோரும் இயல்பான வாழ்க்கையை வாழ்வதற்கு உதவி செய்வதே ஜெய்ப்பூர் கால் திட்டத்தின் மிக முக்கிய குறிக்கோளாகும். இவ்வகையில் 1997 – 1998 ம் ஆண்டு வரை 275 செயற்கை அவயவங்களை பொருத்தியுள்ளோம். அத்துடன் போலியோவின் தாக்கத்தால் பாதிப்படைந்தோருக்கு கலிப்பரும் இவ்வாறு பாதிப்படைந்தோர் பயன்படுத்துகின்ற நடைதாங்கிகள், முச்சக்கரவண்டிகள், ஊன்று கோல்கள், சக்கர நாற்காலிகள் போன்றவற்றையும் வழங்கியுள்ளோம். கடந்த ஆண்டோடு ஒப்பிடுகையில் இவ்வாண்டு செயற்கை அவயவங்களை பொருத்துவதற்குரிய தேவை அதிகரித்துள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இந்த எண்ணிக்கை அகதிகளாக வன்னி மாவட்டங்களில் தங்கி இருப்பவர்கள் யாழ்ப்பாணம் வருவதற்கான பிரதான பாதை திறந்தபின்பு அதிகரிக்கவாய்ப்புண்டு.

செயற்கை அவயவங்களை பொருத்தும் பகுதியும் ஏனைய உதவு கருவிகளை தயாரிக்கும் பகுதியும் வேலை முகாமையாளரின் வழி நடத்தலின் கீழ் இயங்குகின்றது. இங்கு 08 தொழில் நுட்பவியலாளர்கள் கடமை புரிகின்றனர். இவர்களில் நால்வர் ஊனமுற்றவர்கள். இவர்கள் இங்கு கடமை புரிவது போல ஏனையவர்களும் தமது இயல்பான வாழ்வு வாழ்வதற்கு எமது நிறுவனம் உறுதுணையாக இருக்கின்றது. கொழும்பில் உள்ள எமது தாய் நிறுவனமான கொழும்பு நட்புறவுச் சங்கத்தில் மேலதிக பயிற்சி பெறுவதற்காக எமது இரண்டு தொழில் நுட்பவியலாளர்களை அனுப்பியுள்ளோம். இவர்கள் பிளாஸ்ரிக் கால்கள் உற்பத்தி செய்வது, விசேஷமாக வடிவமைக்கப்படும் காலணிகளை உற்பத்தி செய்வது போன்றவற்றுடன் புதிய தொழில் நுணுக்கங்களையும் பயில்வதற்காகவே அங்கு அனுப்பப்பட்டுள்ளனர். எமது தொழிற்சாலையில் அவசரமான திருத்த வேலைகள் செய்யப்பட்டுள்ளதுடன், எமது தொழிற்சாலைக்கு தேவையான நவீன உபகரணங்கள் மற்றும் ஆயுதங்களையும் கொள்வனவு செய்துள்ளோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயன் மருத்துவ பிரிவு

எமது இயன் மருத்துவ பிரிவில் மூன்று புனர்வாழ்வுப் பணியாளர்கள் சுழற்சி முறையில் கடமை புரிகின்றார்கள். இவர்களில் இருவர் யாழ் அரசினர் போதனா வைத்தியசாலையில் பிரதம இயன் மருத்துவரின் நேரடி வழிகாட்டலில் பயிற்சி பெற்றவர்களாவர். முன்பு வாரத்தில் மூன்று நாட்கள் மட்டுமே இயங்கிவந்த எமது இயன் மருத்துவ பிரிவு அண்மைக் காலமாக வாரத்தின் ஐந்து நாட்களும் நோயாளருக்கான இயன் மருத்துவ சேவையை வழங்கி வருகின்றது. இங்கு விஷேட இயன் மருத்துவ பயிற்சி பெற்ற புனர் வாழ்வுப் பணியாளர்கள் இருப்பதாலும் வாரத்தில் ஐந்து நாட்கள் இயன் மருத்துவ சிகிச்சை நடைபெறுவதனாலும், போலியோவின் தாக்கத்துக்குள்ளானவர்களும், மற்றும் இயன் மருத்துவ சிகிச்சை தேவைப்படுபவர்களுக்கும் விஷேட சிகிச்சையை வழங்கமுடிகின்றது. அத்துடன் இப்பிரிவிக்கு தேவையான நவீன இயன் மருத்துவ உபகரணங்களும் எம்மால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. எமது புனர்வாழ்வுப் பணியாளர்கள் ஒவ்வொரு வாரமும் யாழ் போதனா வைத்தியசாலைக்கு சென்று அங்குள்ள ஊனமுற்றோருக்கு எமது நிறுவனத்தால் அவர்களுக்கு வழங்கப்படும் சேவை சம்பந்தமான அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றார்கள். யாழ் போதனா வைத்தியசாலையின் சிரேஷ்ட விரிவுரையாளரான டாக்டர் டி. சி. அம்பலவாணர் எவ். ஆர். சி. எஸ் தனது சேவையை ஊனமுற்றோருக்கு வழங்க முன்வந்துள்ளார். அவரின் வருகை ஊனமுற்றோருக்கு ஒரு வரப்பிரசாதமாகும்.

## விடுதி வசதி

ஊனமுற்றோர் செயற்கைக் கால்களை பொருத்தி நடப்பதற்கு எம்மால் பயிற்சி வழங்கப்படும். அவ்வாறான காலப்பகுதியில் அவர்களுக்கு இலவச உணவும், தங்குமிடவசதியும் எம்மால் வழங்கப்படுகின்றது.

## சுழற்சி முறைக் கடன்

ஊனமடைந்தவர்களும் சமூகத்தின் ஏனையவர்கள் போல் நடமாட முடியும் என்பதற்காக கால்களை வழங்குகின்றோம். அத்துடன் அவர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்தக் கூடிய பொருளாதார நிலையை அடையவும், சமூகத்துக்கு பாரமாக இல்லாது சுய தொழில் வாய்ப்பின் மூலம் அவர்கள் நன் நிலை அடையவும் அவர்களுக்கு வட்டியில்லாத சுழற்சி முறைக் கடனை வழங்கி வருகின்றோம். இதன் மூலம் அவர்கள் தமது தேவைகளை நிறைவேற்ற முற்று முழுதாக மற்றவர்களில் தங்கியிருந்த நிலையை ஓரளவு மாற்றியுள்ளோம். இந்த கடனுதவி திட்டத்துக்கு ஆரம்பத்தில் 'வேல்ட் விஷன்' எனும் அமைப்பே நிதியுதவியளித்து வந்தது. ஆனால் தற்போது இக்கடனுதவி திட்டத்துக்கு உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள், தனிப்பட்டவர்கள் உதவி புரிகின்றனர்.

## கல்வி ஊக்குவிப்பு மானியம் வழங்குதல்

அங்கம் பொருத்திய பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு அவர்களின் கல்வி வளர்ச்சிக்காக மாதம் 250/- வீதம் மானியம் வழங்கி வரு

கின்றோம். இந்த திட்டத்தால் 42 மாணவர்கள் இதுவரை நன்மையடைந்துள்ளார்கள். இவ்வாறு மானியம் வழங்கப்படும் மாணவர்கள் வரவு சம்பந்தமாக அதிபரின் உறுதி செய்யும் கடிதம் ஒவ்வொரு ஆண்டும் பெறப்படுவதுடன், அவர்களின் முன்னேற்றம் எவ்வாறுள்ளது என்பதையறிய முன்னேற்ற அறிக்கையும் எம்மால் பார்வையிடப்படுகின்றது. இந்த மானியம் வழங்கும் செயற்பாட்டுக்கு எந்த நிறுவனமும் எமக்கு உதவி செய்யவில்லை. அதனால் இந்த நன்நோக்க சேவைக்கு அன்பளிப்புகள் கிடைப்பதை வரவேற்கின்றோம்.

## திட்ட பிரேரணைகள்

''நோராட்'' நிறுவனத்தால் எமது திட்டங்களுக்காக வழங்கப்பட்ட நிதி 1997 ம் ஆண்டோடு முடிவடைந்து விட்டது. எமது தாய்ச் சங்கமூடாக 1999 – 2001 ஆண்டுக்கான திட்ட பிரேரணைகள் ''யு. எஸ். எய்ட்'' நிதிவழங்கும் நிறுவனத்துக்கு ஏற்கனவே சமர்ப்பித்துள்ளோம். இத்திட்டப் பிரேரணையில் செயற்கைக் கால் பொருத்துவதற்கான மூலப் பொருள்கள் கொள்வனவு, ஊனமுற்றோர் நடமாட உதவும் கருவிகளின் உற்பத்தி, வட்டியில்லா சுழற்சி முறைக் கடன் வழங்கல், மாணவருக்கான கல்வி மானியம் வழங்குதல், தொழில் நுட்பவியலாளருக்கான பயிற்சி வழங்குதல் போன்றவற்றிற்குக் நிதியுதவி கோரியுள்ளோம்.

இதேபோல் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உதவியுடன் 10 கே.வி.மின் வலு பிறப்பாக்கி ஒன்றையும், பிளாஸ்ரிக் கால் உற்பத்திக்கு தேவையான தொலைந்த மூலப் பொருள்களையும் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எமது வேண்டுகோளை ஏற்று 15 கே. வி. வலுவுடைய மின் பிறப்பாக்கி ஒன்று எமக்கு அவர்களால் வழங்கப்பட்டுள்ளது என்பதை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம். பிளாஸ்ரிக் கால்கள் தயாரிப்பதற்கு தேவையான உதிரிப்பாகங்கள் கிடைக்கப் பெற்றதும் அத்திட்டத்தையும் செயற்படுத்த உத்தேசித்துள்ளோம்

## நன்றி

ஊனமுற்றோர் சமூகத்துக்காக எமது பணியாளர்கள் தங்களை அர்ப்பணித்து கண்ணியமான முறையில் ஆற்றிவரும் சேவைக்கு எமது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம். எங்களின் முக்கிய நிதிவழங்குனரான நோராட், யு. எஸ். எய்ட் நிறுவனங்களுக்கும் ஏனைய நிதி வழங்குனர்களான சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், வை. எம். சி. ஏ சர்வதேச றோட்டரிக் கழகம், எமக்குதவிபுரிந்த உள்ளூர், வெளியூர், தனிநபர்கள், நிறுவனங்கள் அனைத்துக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் எமக்குதவி புரியும் அரச அதிபர், ஏனைய உதவியாளருக்கும் எமது நன்றிகள். எங்களுக்கு எந்நேரமும் உதவியும் ஒத்தாசையும் வழங்கி வரும் தாய்ச் சங்கத்திற்கும் எங்கள் நன்றி உரித்தாகுக.

**டாக்டர் (திருமதி) ஜெ. கணேசமூர்த்தி**
திட்டச் செயலாளர்
31 - 12 - 1998



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1987ம் ஆண்டு யூலை மாதம் தொடக்கம் 1998ம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை செயற்கை அவயவங்கள் பொருத்தியோர் விபரங்கள்

**செயற்கைக் கால்கள் பொருத்தியோர்**

| | |
|---|---|
| முழங்காலுக்கு கீழ் | 380 |
| முழங்காலுக்கு மேல் | 1399 |
| மேலதிக கால்கள் (Bi lateral Extra) | 23 |
| | 1802 |

| | |
|---|---|
| கால் பொருத்திய ஆண்கள் | 1484 |
| கால் பொருத்திய பெண்கள் | 295 |
| | 1779 |

**வயதெல்லை**

| | |
|---|---|
| 01–10 | 33 |
| 11–20 | 579 |
| 21–30 | 517 |
| 31–40 | 232 |
| 41–50 | 185 |
| 51–60 | 147 |
| 61–70 | 63 |
| 71–80 | 23 |
| | 1779 |

**கால்களை இழந்தமைக்கான காரணங்கள்**

| | |
|---|---|
| குண்டுத் தாக்குதல் | 104 |
| எறிகணை வீச்சு | 266 |
| துப்பாக்கிச் சூடு | 112 |
| மிதி வெடி | 939 |
| வீதி விபத்துக்கள் | 96 |
| தொழிற்சாலை விபத்துகள் | 02 |

**செயற்கைக் கைகள் பொருத்தியோர்**

| | |
|---|---|
| முழங்கைக்கு மேல் | 38 |
| முழங்கைக்கு கீழ் | 68 |
| மேலதிக கைகள் (Bi lateral Extra) | 03 |
| | 109 |

| | |
|---|---|
| கை பொருத்திய ஆண்கள் | 89 |
| கை பொருத்திய பெண்கள் | 17 |
| | 106 |

**வயதெல்லை**

| | |
|---|---|
| 01–10 | 01 |
| 11–20 | 48 |
| 21–30 | 37 |
| 31–40 | 13 |
| 41–50 | 04 |
| 51–60 | 02 |
| 61–70 | 01 |
| 71–80 | |
| | 106 |

**கைகளை இழந்தமைக்கான காரணங்கள்**

| | |
|---|---|
| குண்டுத் தாக்குதல்கள் | 08 |
| எறிகணை வீச்சு | 40 |
| பிறப்பிலேயே ஏற்பட்ட குறைபாடு | 21 |
| துப்பாக்கிச் சூடு | 20 |
| விபத்துகள் | 15 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| நீரிழிவு | 130 | மிதி வெடி | 02 |
| குஷ்டரோகம் | 20 | | |
| தசைகள் அழுகிய நிலை | 53 | | |
| உயர்ந்த இடங்களில் இருந்து தவறி விழுதல் | 17 | | |
| வாள், கத்தி, வெட்டுகள் | 04 | | |
| பிறப்பிலேயே ஏற்பட்ட குறைபாடு | 11 | | |
| புற்றுநோய் | 20 | | |
| சூறாவளி | 02 | | |
| விலங்குகளால் தாக்கப்பட்டவர்கள் | 04 | | |
| | 1780 | | 106 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1987ம் ஆண்டு யூலை மாதத்திலிருந்து 1998ம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் நடைபெற்ற வேலைகளின்

# புள்ளிவிபரத் தகவல்கள்

## செயற்கை அவயவம் பொருத்தும் பகுதி

| | |
|---|---|
| பொருத்திய அவயவங்கள் – கால்கள் | 1802 |
| கைகள் | 109 |
| உற்பத்தி செய்யப்பட்ட பாதங்கள் | 1444 |
| உற்பத்தி செய்யப்பட்ட பட்டிகள் | 4668 |
| செய்யப்பட்ட திருத்த வேலைகள் | 6235 |

## ஓர்தோற்றிக் பகுதி

| | |
|---|---|
| பொருத்தப்பட்ட கலிப்பர்கள் | 46 |
| வழங்கப்பட்ட முச்சக்கரவண்டிகள் | 217 |
| வழங்கப்பட்ட சக்கர நாற்காலிகள் | 62 |
| வழங்கப்பட்ட கை ஊன்று கோல்கள் | 50 |
| வழங்கப்பட்ட முழங்கை ஊன்று கோல்கள் | 875 |
| வழங்கப்பட்ட பாத இணைப்பு பட்டிகள் | 189 |
| விசேட பட்டிகள் | 20 |
| உருக்கு நடைதாங்கிகள் | 05 |
| ஏனையவகை ,, | 03 |
| சிலும்புகள் (ஸ்பிளின்ற்) | 35 |
| பெறம்பியுலேற்றர் | 02 |
| பயிற்சிக்கான சைக்கிள்கள் | 03 |
| வெள்ளைப் பிரம்புகள் | 110 |
| சப்பாத்து உயர்த்திக் கொடுத்தல் | 154 |

## இயன் மருத்துவப் பிரிவு

| | |
|---|---|
| சிகிச்சையளித்த நோயாளர்களின் எண்ணிக்கை | 603 |
| நோயாளரின் வருகை | 5902 |

## புனர்வாழ்வுச் சேவைகள்

| | |
|---|---|
| செயற்கைக் கால் பொருத்தியவர்களில் வருமானம் ஈடுவட்டதற்காக வட்டியில்லாக் கடன் பெற்றவர்கள் | 248 |
| மாணவர்களுக்கான ஊக்குவிப்பு பணம் பெற்றவர்கள் | 42 |
| உளவள சேவைகளினால் பயனடைந்தவர்கள் | 1431 |
| உளவள சேவைகள் | 4218 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1997-ம் ஆண்டு யூலை மாதம் தொடங்கி 1998-ம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை கிடைத்த அன்பளிப்புகளின் விபரம்

**ஜூலை 1997.**

| | |
|---|---|
| டாக்டர். (செல்வி) பி. சின்னப்பா – போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம். | 1000.00 |
| நோராட் (குறித்த திட்டத்தின் இரண்டாம் பகுதிக் கொடுப்பனவு) | 1249750.00 |
| யாழ். மத்திய கல்லூரி லியோ கழகம் | 3000.00 |
| யு. எஸ். எய்ட் | 217500.00 |

**ஓகஸ்ட் 1997**

| | |
|---|---|
| சியோன் சேச் (Zion's Church) 24, ராமையா செட்டியார் வீதி, யாழ்ப்பாணம். | 5000.00 |
| எவன்ஜேசன் | 58982.00 |

**செப்டெம்பர் 1997**

| | |
|---|---|
| செல்வி. வி. சண்முகரட்ணம் மருத்துவப்பகுதி யாழ் போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் | 1000.00 |

**ஒக்டோபர் 1997**

| | |
|---|---|
| கிறீஸ்தவ வாலிபர் சங்கம் – யாழ்ப்பாணம் | 396500.00 |
| திரு. திருமதி. நல்லையா 35 ஏ. லமோமியர் தெரு என். எஸ். டபிள்யு 2146 அவுஸ்ரேலியா | 4000.00 |
| திரு. திருமதி. அரசசிங்கம் மே/பா திருமதி நல்லையா லமோமியர் தெரு, என். எஸ். டபிள்யு 2146 அவுஸ்ரேலியா. | 2000.00 |

**நவம்பர் 1997**

| | |
|---|---|
| டாக்டர். எம். குணரட்ணம் புங்கன்குள வீதி, யாழ்ப்பாணம். | 2000.00 |

**டிசம்பர் 1997**

| | |
|---|---|
| கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம். | 1000.00 |
| லயன்ஸ் கழகம் நல்லூர். | 12000.00 |
| திருமதி. வி. தர்மராஜ் – கல்வயல் வீதி, சாவகச்சேரி. | 3500.00 |
| திருமதி. வி. பத்மநாதன் – கல்வயல் வீதி, சாவகச்சேரி. | 3500.00 |
| திருமதி. கே. செல்லப்பா – கல்வயல் வீதி, சாவகச்சேரி. | 3500.00 |

**ஜனவரி 1998**

| | |
|---|---|
| லயன்ஸ் கழகம் – நல்லூர் | 7000.00 |
| யு. எஸ். எய்ட் | 65815.00 |
| யு. எஸ். எய்ட் | 122875.00 |
| சயேட்சய தமிழ்ச்சங்கம் - இலண்டன் | 50042.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மார்ச் 1998**

| | |
|---|---|
| யு. எஸ். எய்ட் | 44740.00 |
| செல்வி எஸ். சாமினி சுன்னாகம் தெற்கு சுன்னாகம் | 1000.00 |
| திரு. எஸ். சிறீதரனும் நண்பர்களும் ஜேர்மனி | 2412.00 |

**ஏப்பிரல் 1998**

| | |
|---|---|
| யு. எஸ். எய்ட் | 48969.00 |
| டாக்டர் செல்வி பி. சின்னப்பா போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம். | 1000.00 |
| இல்கா உசிற் றாலோ - தலைச்செயலகம் ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைப்பிரிவு | 5000.00 |
| யு. எஸ். எயிட் | 61656.00 |

**ஜூன் 1998**

| | |
|---|---|
| செல்வன். கே. நகுலேஸ்வரன் ஜி/11, சென்ஜேம்ஸ் தொடர்மாடி, கொழும்பு - 15. | 1000.00 |
| திரு. எஸ். ராசா மே/பா திரு. தி. தவராசா த. பெ. இல 9432, டோகா | 10000.00 |
| திரு வி. ஏகாம்பரநாதன், மருதனார் மடம், சுன்னாகம் (திருமதி. ஆர். வெற்றிவேற்பிள்ளை ஞாபகார்த்த அன்பளிப்பு) | 3000.00 |
| யு. எஸ். எய்ட் | 132441.00 |

**ஜூலை 1998**

| | |
|---|---|
| திரு. திருமதி. வி. ராஜா, யாழ்ப்பாண வீதி, உடுப்பிட்டி | 1000.00 |
| டாக்டர். எம், குணரட்ணம் புங்கன்குள வீதி, யாழ்ப்பாணம் | 2000.00 |
| திருமதி. டேசி குமரையா 98/6 கச்சேரி கிழக்கு ஒழுங்கை யாழ்ப்பாணம். | 2000.00 |

**ஓகஸ்ட் 1998**

| | |
|---|---|
| வண. பிரான்சிஸ் டானியல், சென் பிரான்சிஸ் சேவியர் சேச் திருநெல்வேலி, யாழ்ப்பாணம். | 5000.00 |
| சமாதானத்துக்கான வட (சிறிலியனிஸ) அமெரிக்கா | 9600.00 |

**செப்டெம்பர் 1998**

| | |
|---|---|
| யு. எஸ். எய்ட் | 242441.00 |
| மகளிர் தோழமை அமைப்பு – அவுஸ்ரேலியா | 75620.00 |
| திரு. எல். தயாளன் – லண்டன் | 4000.00 |
| திரு. ரி. தேவராஜ் – டோகா | 9979.00 |

**ஒக்டோபர் 1998**

| | |
|---|---|
| டாக்டர். (செல்வி) பி. சின்னப்பா போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம் | 1000.00 |
| டாக்டர். திருமதி. நாகேந்திரா போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம். | 3000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நவம்பர் 1998**

| | |
|---|---:|
| யு. எஸ். எய்ட் | 375616.00 |
| சமூக சேவைப் பணிப்பாளர், திருகோணமலை | 4200.00 |
| திரு. ஆர். இராஜேந்திரா 218, கனகரட்ணம் வீதி, அரியாலை. | 100.00 |
| திருமதி எஸ். பீற்றர் 01, சோமசுந்தரம் அவனியு, சுண்டிக்குளி | 10000.00 |
| சிறப்ஷய சப்போட்ஷய தமிழ் அசோசியேசன் இலண்டன் | 33092.00 |

**டிசம்பர் 1998**

| | |
|---|---:|
| யு. எஸ். எய்ட் | 50748.00 |
| இல்க்கா உசிற்றாலோ – ஐரோப்பிய ஒன்றிய இலங்கைப்பிரிவு | 5000.00 |
| திரு. பவினுப்பிள்ளை சனிஸ்லஸ் பிலேந்திரன். ஜேர்மனி | 2000.00 |

## பொருள்களாக கிடைத்த அன்பளிப்புகள்

| | | |
|---|---|---|
| சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாணம் | – | 01 பிளாஸ்ரிக் சுருள் 360 கட்டி லைபோய் சோப் |
| ராசா டீசல்ஸ் யாழ்ப்பாணம் | – | கீழ்ச் செஞ்நிற விளக்கு |
| திரு. கே. ரவீந்திரராசா கைலாசபிள்ளையார் கோவிலடி,யாழ். | – | 1 சுவர் மணிக்கூடு |
| கொழும்பு நட்புறவுச் சங்கம் | – | 25 kg ' பாரிஸ் சாந்து ' |
| உதயன் பத்திரிகை நிறுவனம் | – | உதயன் பத்திரிகை |
| சுண்டிக்குளி மகளிர் கல்லூரி சமூக சேவைக்கழகம் யாழ்ப்பாணம் | – | விடுதியில் தங்கியிருந்த நோயாளருக்கும், வேலை செய்யும் ஊழியர்களுக்கும் 26-05-98 அன்று வழங்கிய மதிய போசன உணவுப் பார்சல்கள் |
| ஸ்ரீ சாயி சமித்தி, கொழும்புத்துறை யாழ்ப்பாணம். | – | இரண்டு மதிய உணவுப் பார்சல்கள் |
| டாக்டர் எம் கணேசரட்ணம் புங்கன்குள வீதி, யாழ்ப்பாணம். | – | ஒரு சோடி கைத்தடி |
| சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், கொழும்பு | – | 01 ஜெனரேட்டர் 15 கே. வி. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொழும்பு நட்புறவுச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையான ஜெய்ப்பூர் கால் திட்டத்தின் முகாமைத்துவ குழுவிற்கான கணக்காய்வாளர் அறிக்கை.

1997 ல் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கை கொழும்பு நட்புறவுச் சங்கத்தின் யாழ் கிளையான ஜெய்ப்பூர் கால் திட்டத்தின் கணக்குகள் யாவும் எம்மால் பரிசீலனை செய்யப்பட்டது.

எமது கணக்காய்வு அறிக்கையானது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டதும், இலங்கையின் கணக்கியல் நியமங்களுக்கு ஏற்பவும் தயாரிக்கப்பட்டது. இந்த அறிக்கைக்கு தேவையான தகவல்களும் விளக்கங்களும் எம்மால் பெறப்பட்டது.

எமது அபிப்பிராயப்படி இவ் நிறுவனம் சரியான கணக்கு புத்தகங்களை பேணிவருகின்றது என்றும், எமக்கு வழங்கப்பட்ட தரவுகளுக்கும் விளக்கங்களுக்கும் ஏற்ப வரவு செலவு அறிக்கையும் ஐந்தொகையும் 1997 மார்கழி மாதம் 31ம் திகதியின் இந்நிறுவனத்தின் உண்மையானதும் செம்மையானதுமான நிலையை எடுத்துக்காட்டுவதாக கூறிக் கொள்கின்றோம்.

ஒப்பம்
எஸ். வெற்றிவேலாயுதம்
கணக்காளர்
**எஸ். வெற்றிவேலாயுதம் அன் கோ**
யாழ்ப்பாணம்.
06—10—1998

தற்போது நடைமுறையிலுள்ள கணக்கியல் காலமான ஜனவரி — டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதியை ஏப்பிரல் — மார்ச் வரை என மாற்றுவதற்கு முகாமைத்துவ குழு தீர்மானித்துள்ளது. இதனால் 1998 ஜனவரி தொடக்கம் 1999 மார்ச் வரையான காலப்பகுதிக்கான கணக்காய்வு அறிக்கை அடுத்த ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்படும்.

முகாமைத்துவ குழு
ஜெய்ப்பூர் கால் திட்டம்
(கொழும்பு நட்புறவுச்சங்க யாழ் கிளை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால் தந்து காத்தவரே வாழி! வாழி!!

ஈழமெனும் நமது இலங்கை நாட்டில் இன்று
இன்னல் உறும் மக்கள் பல கோடி கண்டும்
வாழ வழி தேடி நிதம் அலைந்த மக்கள்
வையம் இதில் செல் அரக்கன் கொடுமைக் கஞ்சி
செல்கையிலே நாம் சென்றோம் நாம் என் செய்வோம்
சென்ற இடம் புகலிடமாய் முல்லைத்தீவு
மல்லாவி உறைகையிலே உறுத்தும் நோய் தான்
மலேரியாவும் வருத்தமிகு தந்திடவே
காலிடையில் பலம் இன்றி நடக்க ஒண்ணா
பாவி நான் பரிதவிக்கும் வேளை தன்னில்
யாழ் நங்கை உதவி வைத்திய சாலை நாடி
வருத்தம் இது போக்க வழி கேட்ட போது
நீர் இழிவு என்னும் பெரிய நோய் தான் வாட்டி
நிற்க ஒண்ணா நிலைகாட்டி காலை நீக்க
ஜெய்ப்பூரார் எனும் தொண்டர் நிறுவனத்தார்
நெடும் மகன் நீ நடைபயில வேண்டும் இன் நாள்
அஞ்சற்க என்று பெரும் மொழிகள் கூறி
ஆறுதலை தந்தவர்கள் காத்தும் இன் நாள்
செய்காலால் நடக்க வைத்தார் சேவை தன்னால்
செழிப்புடனே வாழ வழி காட்டி வைத்தார்
முடமான (நிலை இலை நீ) முடவன் இலை
முத்தான பொற்காலை ஊன்றி நீயும்
முன்னைடந்த உன்கடமை பலவும் ஆற்ற
முயன்றுனது காலூன்டி நடப்பாய் இன்று
தன் கைதான் தனக்கு உதவி என்ற சொல்லை
தடுத்தவர்கள் பொய்யாக்கி இன்று என்னில்
உன் காலே உனக்கு உதவி ஊறு இல்லை
உலகத்தை அறிந்திட நீ நடப்பாய் என்ற
உம்மவரை போற்றுதலே எங்கள் கடமை
உம் பணிவு உம் கருணை உங்கள் கடமை
என்றும் இல்லா எழுதனை செய்தீர் இன்று
என்றென்றும் ஜெய்ப்பூர் நிறுவனமே வாழீ

நன்றி

**அம்பலவாணர் குகானந்தன்.**

பாடசாலை ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்,
12. 01. 1998.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிதிவெடிகளின் பாதிப்பும் ஜெய்ப்பூரின் சேவையும்

(யாழ். ஜெய்ப்பூர் செயற்கைக் கால் திட்டத்தின் 12 வது ஆண்டு நிறைவையொட்டி எமது திட்டப் பணிப்பாளர் திருமதி. தி. யோகநாதனினால் வரையப்பட்டு சஞ்சீவி வார இதழில் வெளிவந்த கட்டுரை இது)

ஜெகமெல்லாம் போற்றிட ஜெய்ப்பூர் பாத சேவைக்கு 12 ஆண்டுகளை முழுமையாக அர்ப்பணித்த மனநிறைவில் இன்று நாம் நிற்கிறோம். 1987 ஆம் ஆண்டு ஜுலை மாதம் உள்நாட்டு யுத்தத்தினால் அங்கங்களை இழந்து பரிதவித்த ஊனமுற்றோருக்கு அங்கப் புனரமைப்புச் செய்ய அன்றைய யாழ். அன்னையர் முன்னணியினதும். கொழும்பு நட்புறவுச் சங்கத்தினதும், நோராட் (NORAD) அமைப்பினதும் கூட்டு முயற்சியினால் உருவாக்கப்பட்டதே யாழ் ஜெய்ப்பூர் செயற்கைக் கால் திட்டம்.

யுத்த நெருக்கடிகள், பொருளாதார வசதிக்குறைவுகள். அரச சட்ட கெடுபிடிகள். போக்குவரத்துச் சிரமங்கள். கட்டுப்பாடுகள் என்பனவற்றுக்கு மத்தியில் எதிர்நீச்சல் போட்டு இந்த 12 ஆண்டு காலப்பகுதியில் நாம் 1841 பேருக்கு செயற்கைக் கால்களை பொருத்தியுள்ளோம். அதில் அதிர்ச்சியான விடயம் என்னவென்றால் இந்தத் தொகையினரில் நோய்க் காரணிகள், விபத்துக்கள் என்பவற்றால் கால் பொருத்த நேரிட்ட 368 பேரைத்தவிர்த்து எஞ்சிய 1473 பேரும் போர் வன்முறைகளினாலேயே கால்களை இழந்து செயற்கைக்கால் பொருத்தப்பட்டவர்கள். அதிலும் 983 பேர் மிதிவெடிகளில் சிக்கியே கால்களை இழந்தவர்கள் என்பதுதான்.

செயற்கைக் கால்களைப் பொருத்தியவர்களில் பொருளாதார நிலையில் மிகவும் தாழ்ந்தவர்களாகிய 261 பேருக்கு நாம் அவர்கள் சுய தொழில் வாய்ப்பில் ஈடுபட்டுத் தங்களுக்கும் தங்கள் குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கும் கணிசமான அளவு வருவாயை ஈட்டிக் கொடுக்கும் வகையிலாக கிட்டத்தட்ட ஐந்தரை லட்சம் ரூபாவை வட்டியில்லாத சுழற்சி முறையிலான கடனாகக் கொடுத்துள்ளோம். கல்வி பயிலும் – கால் பொருத்திய – மாணாக்கருக்கு நாம் உதவிப் பணமாக மாதம் 250 ரூபா வீதம் வழங்கி வருகின்றோம். இதனால் பயனடையும் மாணவரின் தொகை 44 ஆகும்.

இலங்கையில் மிதிவெடி அவலங்கள் சம்பந்தமாக நடத்தப்பட்ட மதிப்பீடு ஒன்றின்படி. மிதிவெடிகளினால் கால்களைப் பறிகொடுத்தோரின் தொகையில் 30 சதவீதத்தினர் யாழ். குடாநாட்டுக் குடிமக்களே எனத் தெரிய வருகின்றது. அத்தோடு 1996 ஆம் ஆண்டு நடுப்பகுதிக்குப் பின்னரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அதாவது 1995 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் புலம் பெயர்ந்த மக்கள் யாழ் நகரில் மீளக் குடியேறிய பின்) மிதிவெடிகளின் கொரேத்தாண்டவம் உச்சக்கட்டத்திற்கு வந்தமை எமை நாடிவந்த – கால் இழந்தவர்களின் எண்ணிக்கையிலிருந்து புலனாகிறது. மாதம் பத்துப் பேர் மிதிவெடிகளால் கால்களை இழந்திருக்கிறார்கள் என்று கணக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. இன்னமும் மிதிவெடிகளில் சிக்கிப் பலர் கால்களை இழக்கிறார்கள் என்று செய்திகள் வெளிவந்தவண்ணமே இருக்கின்றன. போக்கு வரத்து வசதியின்மை மற்றும் மனவிரக்தி, அறியாமை என்பன போன்ற காரணங்களால் எமது சேவைகளை நாடிவராதோர் சமூகத்தில் இன்னும் பலர் இருக்கிறார்கள். பாதிக்கப்பட்ட அல்லது கால் துண்டிக்கப்பட்ட நிலையில் வைத்திய வசதி பெறுமுன்னர் மரணத்தை தழுவியோர் இன்னும் சிலர்.

மனிதர்களை முடமாக்கும் அல்லது மரணத்தை ஏற்படுத்தும் வெடிகளை நாம் 7 வகையாக வகுக்கலாம். இவற்றுள் நிலத்துள் முழுமையாகவோ அன்றிப் பகுதியாகவோ புதைக்கப்பட்டுள்ள வெடிகளையே நாம் நிலக்கண்ணி வெடிகள் என்கின்றோம். இவை ஒரே நேரத்தில் பலருக்குப் பாரதூரமான விளைவுகளை உண்டாக்கும். காலினால் மிதித்தால் அல்லது ஆயுதங்களினால் தட்டுப்பட்டால் வெடிக்கும் வெடிகளை நாம் மிதிவெடிகள் என்கிறோம். மிதித்தல், கொத்துதல் போன்ற செய்கைகளின் போது இவை வெடித்துச் சிதறி விரல்களை இழக்கவைக்கும்; பாதத்தை துண்டிக்கும் சிலவேளைகளில் அந்த இடத்திலேயே முழுக் காலையுமே பலியெடுக்கும் உடல் முழுவதும் காயங்களை ஏற்படுத்தி உயிரையே காவு கொள்ளும். கண் பார்வையைப் பாதிக்கும்; அல்லது குருடாக்கும். கேட்கும் சக்தியைக் குறைக்கும். அல்லது செவிடாக்கும்.

இந்தக் கொடிய வெடிவகைகளை இராணுவத்தினரும், போராளிகளும் தங்களுடைய சுயபாதுகாப்புக்காகவும் தங்களைத் தாக்க வருகின்ற எதிரிகளை அழிக்கும் அல்லது முடமாக்கும் எண்ணத்துடன் நிலத்தில் புதைத்து வைக்கின்றார்கள். இந்த வெடிகள் பெரும்பாலும் பாதுகாப்பு அரண்கள், அணைகள், பதுங்கு குழிகள், இராணுவமுகாம்கள் ஆகியவற்றை அண்மித்த பகுதிகளிலேயே புதைக்கப்பட்டிருக்கும். அத்தோடு மரங்களுக்கு கீழும், வீதியோரங்களிலும், கிணற்றடி, வீட்டு வாசல், வயல் வெளிகள், தோட்டங்கள் என்பன போன்ற இடங்களிலும் எதிராளிகளின் நடமாட்டங்களைக் கட்டுப்படுத்தும் நோக்கங்களுடனும் புதைக்கப்பட்டுள்ளதை அறியக் கூடியதாய் இருக்கின்றது.

யுத்தம் நடந்த பிரதேசங்களில் இருந்து வெடிகளைப் புதைத்தவர்கள் விலகிச் செல்லும்போது தாங்கள் விதைத்த வெடிகளை அழித்து விட்டுச் செல்வதில்லை. பாதுகாப்புக் காரணங்களைக்காட்டி புதைத்த இடங்கள் சம்பந்தமான வரைபடங்களையும் விட்டுச் செல்வதில்லை. தங்கள் வீடு வாசல்களைப் பார்க்கவும், சந்தர்ப்ப சூழ்நிலைகள் சாதகமாக இருக்கும்போது மீளக்குடியமரவும் செல்லும் அப்பாவிப் பொதுமக்களே பெரும்பாலும் மிதிவெடிகளில் மிதித்து கால்களை இழக்கின்றார்கள். கால்நடைகளும் உணவுதேடி அலையும்போது வெடிகளில் மிதித்து கால்களை இழக்கின்ற பரிதாபம் மிகவும் கொடுமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் மட்டுமன்றி உலகில் உள்நாட்டுச் சண்டைகள் மற்றும் இனக்கலவரங்கள் நடைபெறும் பல நாடுகளில் லட்சக்கணக்கான மக்கள் இக்கொடிய ஆயுத வெடியால் உயிரிழந்த அல்லது முடமாகிய பரிதாப நிலை, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்கான சேவைகளை ஆற்றி வரும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் ( ஐ. சி. ஆர். சி ) கவனத்தை ஈர்த்தது.

1995 ஆம் ஆண்டளவில் நிலக்கண்ணிவெடிகள் தடுக்கப்படவேண்டும் என்ற சுலோகத்துடன் செஞ்சிலுவை சர்வதேசக் குழுவும் செம்பிறைச் சங்கமும் ஒன்றிணைந்து மிதிவெடிகளுக்கு எதிரான பிரசாரங்களை ஆரம்பித்தன. பொதுசன அபிப்பிராயத்தின் உந்துதலும். பல்வேறு தனியார் அமைப்புக்கள் சர்வதேச நிறுவனங்கள், அரசாங்கங்கள், அரசசார்பற்ற அமைப்புக்கள் ஆகியவற்றின் கூட்டுறவும் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் மிதிவெடிகளுக்கு எதிரான ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு பக்கபலமாய் அமைந்தன.

மாநாடுகள், வட்டமேசை உரையாடல்கள், விளம்பர உத்திகள், புள்ளி விவர சேகரிப்புகள், விசேட ஆய்வுகள், அனுபவ அறிக்கைகள் என்பவற்றின் மூலம் மிதிவெடிகளின் நாசகரமான பின் விளைவுகள் எடுத்துக்காட்டப்பட்டன.

உலகில் கிட்டத்தட்ட 12 க்கும் 15க்கும் இடைப்பட்ட நாடுகளில் குறிப்பாக ஆபிரிக்கா, மத்திய கிழக்கு, ஆசிய நாடுகளில் — இத்தகைய மனித இழப்புகள் மிகவும் மோசமாக இருந்தன. பத்துக்கோடி நிலக் கண்ணிகளினால் வருடாந்தம் சுமார் 24 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் இறந்தனர் அல்லது முடமாயினர் என அறிக்கைகள் தெரியப்படுத்தின செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் செயற்கைக்கால் உற்பத்திப் பட்டறைகளில் மட்டும் 1979 - 1998 ஆண்டு காலப்பகுதியில் ஒரு லட்சத்து 30 ஆயிரம் செயற்கைக் கால்கள் உற்பத்தி செய்யப்பட்டன. மிதி வெடிகளினால் மிகவும் பாதிக்கப்பட்ட பல நாடுகளில் செயற்கைக் கால்களைத் தயாரிக்கும் தொழிற் கூடங்கள் அமைக்கப்பட்டு அரசுகளுக்கும் சமூக சேவை ஸ்தாபனங்களுக்கும் புனர்வாழ்வுப் பணிகளுக்காக ஒப்படைக்கப்பட்டன. நவீன பொலி புறொப்பைலீனிலான கால்களை உருவாக்க பலருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த வகையில்தான் யாழ். ஜெய்ப்பூர் செயற்கைக் கால் திட்டத்திற்கும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினால் கால் பொருத்தும் நிபுணர் ஒருவரின் சேவை கிடைத்துள்ளது. இவரின் பரந்த அனுபவத்தாலும், தொழிநுட்ப வல்லமையினாலும் எமது திட்டம் பலவகையில் நன்மையடைய வாய்ப்புக்கள் உண்டு.

மிதிவெடிகளின் இராணுவ ரீதியிலான பலன்களைவிட மனித இழப்புக்களே பன்மடங்கு அதிகம் என ஆய்வுகளிலிருந்து தெரியவந்துள்ளது. யுத்த அரங்குகளில் கடமை புரிந்த பல சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் கூட இதனை ஏற்றுள்ளார்கள். உயிரிழப்பு, அங்கஇழப்பு என்பவற்றோடு சமூக, பொருளாதார உளவியல் ரீதியாகவும் மக்கள் பாதிப்படைந்து சமுதாயத்தில் பல புதிய பிரச்சனைகள் உருவாகியுள்ளன. விவசாயத்திற்கும் தோட்டத்திற்கும் பயன்பட்ட பல விளைநிலங்கள் பயனற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுப்போய் இருக்கின்றன. பல குடும்பங்கள் தங்கள் வருவாய்களை இழந்து தவிக்கின்றன. வாழ்க்கைச் செலவும் கூடிக்கொண்டே போகின்றது. அங்கப்பாதிப்புள்ள ஒரு மனிதனின் குடும்பத்தில் மருத்துவச் செலவுகளும் கூட. அதோடு மகிழ்ச்சியின்மை, விரக்தி, தேவையற்ற பயப்பிராந்தி, மனக்குழப்பம், தனிமை, என்பன போன்ற உணர்வுகள் நிலவுவதும் சர்வ சாதாரணம்

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரோடு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம், யுனிசெவ் போன்ற நிறுவனங்களும் நிலக்கண்ணிகளை தடை செய்யும் பணியில் தீவிரமாகப் பங்குபற்றி வருகின்றன.

மிதிவெடிகளின் உற்பத்தி, சேகரிப்பு, கைமாற்றம், பாவனை என்பவற்றை உள்ளடக்கிய சர்வதேச தடை உடன்படிக்கை ஒன்றை ஒட்டாவாவில் (கனடா) நிறைவேற்றுவதில் அவை வெற்றியும் ஈட்டியுள்ளன. பல நாடுகள் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன. இன்னும் சில நாடுகள் உடன்படிக்கையை வரவேற்றாலும் தங்கள் நாடுகளில் நிலவும் போர்ச்சூழ்நிலை காரணமாக உடன்படிக்கையில் கைச்சாத்திடவில்லை. இன்னும் சில நாடுகள் உடன்படிக்கைக்கு எதிராக உள்ளன.

ஒருபுறத்தில் கண்ணிவெடிகளை அகற்றும் பணியிலுள்ளோரால் ஒரு லட்சம் கண்ணிகள் அகற்றப்படுகின்ற நேரத்தில் மறுபுறத்தில் இருபது முதல் ஐம்பது லட்சம் கண்ணிவெடிகள் புதிதாக புதைக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. அத்தோடு பத்துக்கோடிக்கு மேற்பட்ட அளவில் கண்ணிவெடிகளை அரசும் போராளிகளும் களஞ்சியப்படுத்தி வைக்கின்றனரென்றும் தெரியப்படுத்தப் படுகிறது. புதைத்தலும், களஞ்சியப் படுத்தலும் இலங்கையிலும் நடைபெறுவது கண்கூடு. இலங்கை அரசு கண்ணிவெடித் தடைக்குஆதரவான கருத்தை வெளியிட்டுள்ளதாயினும் உடன்படிக்கையில் கைச்சாத்திடவில்லை.

கண்ணிவெடி, மிதிவெடி என்பவற்றை அகற்றுவது மிகவும் சிக்கலான ஒரு செயல் நீண்டகாலங்கள் எடுக்கும். உயிராபாயங்கூட உண்டு. பொருள்செலவும் கூடுதலானது. புதிதாக வெடிகள் புதைக்கப்படாத பட்சத்தில் இருக்கின்ற வெடிகளை அகற்றவே ஆயிரம் வருடங்கள் வரை செல்லும் என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது என்றால் நிலமையைச் சற்று யோசித்துப் பாருங்கள்.

யாழ்ப்பாணத்தில் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் வெடிகளை அகற்ற இரண்டுமுதல் இரண்டரை வருட காலம் எடுக்கும் எனவும் 12 வீத நிலப்பரப்பில் அவை புதைக்கப்பட்டிருப்பதாகவும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்டத்தின் அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தோடு இந்த மிதிவெடிகளை அகற்றும் பணிக்கு 35 கோடி ரூபா செலவாகும் எனவும். மேலதிகமாக மூன்றரை கோடிரூபா வாகன, தகவல், தொடர்பு சாதனங்கள், கருவிகள், அலுவலக தேவைகள் என்பவற்றிற்குச் செலவாகும் எனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் சமாதானம் ஏற்பட்டு போர்க்கொடுமை முற்றும் அழிந்தால்தான் புதிய இழப்புக்கள் ஏற்படுவதைத் தடுக்கலாம். ஆனால் இழப்புகளுக்கு ஆளானோருக்கு ஜெய்ப்பூரின் சேவை வாழ்நாள் முழுவதும்தேவை. கால் இழந்து செயற்கைக் காலில் நடமாடும் சிறுவர்களுக்கு அவர்கள் வளரவளர புதிய செயற்கைக் கால்கள் வருடமொன்றுக்கு ஒன்று வீதம் தேவைபடும். வளர்தோருக்கு 2 முதல் 3 வருடங்களுக்கு ஒரு முறை புதிய கால் தேவைப்படும். நடுவில் பழுது பார்ப்புகள் செய்ய வேண்டிவரும். நோய், வயது காரணமாக செயற்கைக்கால்கள் பொருத்தியும் நெடுந்தூரம் நடக்க முடியாதவர்களுக்கு முச்சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகளின் உதவிகள் தேவை. அவர்களில் ஏழைகளுக்கு எமது தொழிற்பயிற்சி உதவிகள், சமூக மறுவாழ்விற்கான பொருளாதார உதவிகள் தொடர்ந்தும் தேவை.

எனவே ஜெய்ப்பூரின் சேவை நீண்ட தொடர்கதைபோல் சென்று கொண்டிருக்கப் போகின்றது. சேவைக்கு நாம் தயங்கவில்லை. ஆனால் அதற்கான நிதியும் தேவையல்லவா? வெளிநாட்டு உதவிகள் தொடர்ந்தும் கிடைக்கும் வாய்ப்புக்கள் உள்ள போதிலும் அவற்றில் முற்றாகத் தங்கியிருக்க முடியாது. எம் மத்தியில் உள்ளவர்களும் எமது சேவைகளின் பரிமாணங்களை உணர்ந்து எமது திட்டத்திற்கு நிதியுதவி அளிப்பதை நாம் பெரிதும் எதிர்பார்க்கின்றோம். நாம் கேட்காமலே எமக்கு நிதியுதவி செய்து எம்மை ஊக்குவிக்கும் கொடையுள்ளம் கொண்டோரும் எம் மத்தியில் உளர். எமக்கு நிதியுதவி செய்த அனைவரும் உடல் ரீதியாகவும், சமூக பொருளாதார ரீதியாகவும் பயனடைந்தோர் நெஞ்சங்களிலும் எமது நினைவிலும் என்றும் நிறைந்திருப்பர்.

வாசகர்களே! மிதிவெடிகளின் கொடூரங்களினாலும் மற்றும் இயற்கை காரணிகளினாலும் விதி வசத்தாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கி அவர்களின் சமூக மறு வாழ்விற்கும் ஒளிமயமான எதிர் காலத்திற்கும் வழிகாட்ட நாம் வழங்கும் சேவைகளுக்கு உதவிக் கரம் நீட்டுங்கள். எம்மோடு இணையுங்கள் என்று ஜெய்ப்பூர் திட்டத்தினராகிய நாம் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெய்ப்பூர் கால் பொருத்தியோரின்

## உள்ளத்திலிருந்து......

மிதிவெடியில் சிக்கி இரண்டு கால்களையும் முழங்காலுக்கு கீழ் இழந்த நான் ஜெய்ப்பூர் நிறுவன உதவியுடன் நடக்கத் தொடங்கியுள்ளேன். நான் ஒவ்வொரு அடியையும் எடுத்து வைக்கும்போதும் இந் நிறுவனம் என்றென்றும் வளர வேண்டும் என இறைவனை வேண்டுகின்றேன்''.

— சோதிலிங்கம்

வாழ்க்கையில் பல கனவுகளுடன் வாழ்ந்த நான் மிதிவெடியில் சிக்குண்டு காலை இழந்த போது வாழ்க்கையையே இழந்துவிட்ட மனநிலைக்குள்ளானேன். நான் போதனா வைத்திய சாலையில் காலுக்கான சத்திர சிகிச்சை முடிவடைந்து இருந்த காலத்தில் ஜெய்ப்பூர் ஊழியர்கள் வந்து ஆறுதல் வார்த்தைகளுடன் மனத்தைரியத்தையும் கொடுத்தனர். மூன்று மாதத்தின் பின்பு எனக்கு ஓர் செற்கைக் காலை செய்து தந்து எனது இயல்பான வாழ்வுக்கு மற்றவரில் தங்கியிருக்கும் நிலையை மாற்றிய ஜெய்ப்பூரை மனதார வாழ்த்துகின்றேன்.

— சி. வடிவானந்தம்.

வகுப்புக்கு சென்றுவிட்டு வீடு திரும்புகையில் தறித்த மரம் விழுந்து எனது ஒரு காலை இழந்தேன். இதனால் எனது கல்வி பாதிக்கப்படுமோ என்று எண்ணினேன். ஆனால் ஜெய்ப்பூர் நிறுவனம் தந்த கால் எனது சொந்தக் கால் போல் இருப்பதனால் நான் எனது கல்வியை தொடர முடிகிறது. இதற்கு இந்த நிறுவனத்தைப் பாராட்டுகின்றேன்.

— சி. கபில்ராஜ்

26 வருடங்கள் வளர்ந்த காலை 26 நிமிடங்களில் அகற்றிய துயரச் செயலால் மனம் குன்றியிருந்த எனக்கு செயற்கைக் காலையும், தகுந்த அறிவுரைகளையும் வழங்கிய ஜெய்ப்பூர் நிறுவனத்தின் பணியை வியந்து பாராட்டுகின்றேன்

— ச. பிரேமராஜ்

ஷெல் வீச்சின் காரணமாக காலை இழந்த நான் ஜெய்ப்பூர் நிறுவன உதவியால் இன்று நடமாடுகின்றேன். ஜெய்ப்பூர் கால் எளிதில் நடக்கக் கூடியதாகவும், பாரம் குறைவானதாகவும், விரைவாகவும் செய்து தருவதனால் எனது கல்வியைத் தொடர உதவுகின்றது. என் போன்ற பல மக்களுக்கு உதவும் ஜெய்ப்பூர் நிறுவன சேவை ஓங்கி வளர வாழ்த்துகின்றேன்

— க. டொறந்தி மஞ்சுளா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த ஆண்டுகளின் முக்கிய நிகழ்வுகள் 1987 — 1998

யாழ் அன்னையர் முன்னணியின் நிர்வாக சபைக் கூட்டம் 15 ம் திகதி நடைபெற்ற போது கொழும்பு நட்புறவுச் சங்கத்தின் யாழ் கிளையாக ஓர் அமைப்பினை உருவாக்குவது என்றும், அவ்வமைப்புக்கான முகாமைத்துவ குழு ஒன்றினை தெரிவு செய்வதெனவும் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. இத்தீர்மானத்துக்கமைய கொழும்பு நட்புறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் வடக்கில் கால் பொருத்தும் ஓர் நிலையத்தை தொடங்குவதற்கான திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. அதன் நிர்வாகசபை உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | — | திருமதி. ரி. குணநாயகம் |
| உப தலைவர் | — | திருமதி. ஈற்றா மேதர் |
| திட்டச் செயலாளர் | — | திருமதி. றீனி யோகநாதன் |
| இணைப் பொருளாளர்கள் | — | டாக்டர் (திருமதி) செ. தெய்வேந்திரன் |
| | — | டாக்டர் (திருமதி) ஜெ. கணேசமூர்த்தி |

**டிசம்பர் 1986**

நோராட் நிறுவனத்தைச் சேர்ந்த திரு. ஹட்சின்சனின் வேண்டுகோளுக்கிணங்க கொழும்பு நட்புறவுச் சங்க திட்டச் செயலாளர் திருமதி. சுவர்ணா பேடினண்ட் யாழ்ப்பாணத்தில் ஓர் கிளையை திறப்பதற்கான ஆரம்ப கூட்டத்தினை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வை. எம். சி. எ கட்டடத்தில் டிசம்பர் 6 ம் திகதி நடாத்தினார். இவருடன் இரண்டு கால்களை இழந்து செயற்கைக் கால் பொருத்திய திரு. லோகநாதனும் உடன் வந்திருந்தார். இரண்டு கால்களை இழந்தவர்களும் நடக்க முடியும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாக இவர் விளங்கினார். இந்தக் குழுவினர் யாழ் அரசினர் பொதுவைத்தியசாலைக்கு சென்று வைத்திய அத்தியட்சகர், வைத்திய ஆலோசகர்கள், சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். பொன்னம்பலம், சிரேஸ்ட உத்தியோகத்தர். டாக்டர் மாலதி, இணைப் பொருளாளர்களான டாக்டர் (திருமதி) செ. தெய்வேந்திரன். டாக்டர் (திருமதி) ஜெ. கணேசமூர்த்தி ஆகியோருடன் யாழ்ப்பாணத்தில் கிளை நிறுவனம் ஆரம்பிப்பது பற்றி கலந்துரையாடினர். இதனடிப்படையில் அவரால் சமர்ப்பிக்கப்பட்ட திட்டத்தை நோராட் நிறுவனம் ஏற்றுக் கொண்டது. ஊனமுற்றோரான திரு. எல். ஜோன்சன் திரு. பி. பரமகுமார் இருவரும் பயிற்சிக்காக தெரிவு செய்யப்பட்டனர், யாழ் தொழில் நுட்ப நிறுவனத்தில் உலோகங்கள் ஒட்டுவதற்கான பயிற்சி திரு. ஜோர்ஜ் பிள்ளைநாயகத்தால் இவர்களுக்கு வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜனவரி** 1987

ஆறுமாத கால பயிற்சி ஒன்றுக்காக திரு. எல். ஜோன்சனும், திரு. பி. பரமகுமாரும் 11 ம் திகதி கொழும்பு சென்றனர். அங்கு அவர்களுக்கான பயிற்சி முடிந்து திரும்பும் போது போலியோவினால் பாதிக்கப்பட்டிருந்த திரு. எல். ஜோன்சனுக்கு பிரிட்டன் உயர்ஸ்தானிகர் கலிப்பர் ஒன்றையும், முழங்காலுக்கு மேல் கால் துண்டிக்கப்பட்டிருந்த திரு. பி. பரமகுமாருக்கு கொழும்பு நட்புறவுச் சங்க திட்டச் செயலாளர் திருமதி சுவர்ணா பேடினண்ட் செயற்கைக் கால் ஒன்றையும் வழங்கி இருந்தனர்.

**மார்ச்** 1987

தொழில் முகாமையாளர் பதவிக்கு விண்ணப்பித்திருந்த 20 விண்ணப்பதாரர்களிலிருந்து திரு. எக்ஸ். எஸ். வை. பிரான்சிஸ் தெரிவு செய்யப்பட்டு 15 ம் திகதி கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இவர் இயந்திரங்கள், மூலப் பொருட்கள், தேவையான உபகரணங்கள் போன்றவற்றை கொள்வனவு செய்து கப்பலில் அனுப்பிவைத்துவிட்டு வைகாசி 20 ம் திகதி யாழ்ப்பாணம் வந்தடைந்தார்.

**மே** 1987

ஜெய்ப்பூர் நிறுவனம் அமைந்திருந்த வீட்டுமைரியாளரான திருமதி கோமதி வன்னியசிங்கத்திற்கும், முகாமைத்துவ குழு சார்பில் தலைவர் திருமதி. ரி. குணநாயகயகத்திற்கும் இடையில் ஐந்துவருட காலத்துக்கான குத்தகை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

**ஜுலை** 1987

செயற்கைக் கால் பொருத்துவதற்கான ஆரம்ப பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. முழங்காலுக்கு கீழ் கால் துண்டிக்கப்பட்டு செயற்கைக் கால் பொருத்தியிருந்த செல்வி. இராதிகா சுப்பிரமணியம் இலிகிதர் / தட்டெழுத்தாளராகவும், திரு. ரி. தேவராஜா அலுவலக உதவியாளராகவும், திருமதி ஞானேஸ்வரி சமையலாளியாகவும் கடமை புரிந்தனர். முகாமைத்துவ குழுவினரால் இவர்களது பணிகள் மேற்பார்வை செய்யப்பட்டன. யாழ்ப்பாண அன்றைய நிலைமையில் காஸ் சிலிண்டர்களைப் கொழும்பிலிருந்து கொண்டு வருவதில் இடர்பாடுகள் காணப்பட்டன. எனவே காஸ் சிலிண்டர்களைப் பயன்படுத்தாது செயற்கைக் கால்களை தயாரிப்பதற்கான வழிமுறைகள் எமது தொழில் முகாமையாளரால் நடைமுறைப்படுத்தப்பட்டது. பயிற்சிக்காக கொழும்பு சென்ற எமது இரண்டு பயிலுனர்களும் 15 ம் திகதி பயிற்சியை முடித்துக் கொண்டு யாழ்ப்பாணம் திரும்பினார்கள்.

எம். எஸ். எவ்ப். கொழும்பு இணைப்பாளர் எமது தொழிற்சாலைக்கு வருகை தந்து ரூபா 100,000/- வை நன் கொடையாக வழங்கினார்.

**ஓகஸ்ட்** 1987

கொழும்பு நட்புறவுச் சங்க திட்டமிடல் செயலாளர் திருமதி சுவர்ணா பேடினண்ட் அவர்களால் எமது தொழிற்சாலை 15 ம் திகதி சம்பிரதாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்வமாக தொடக்கி வைக்கப்பட்டது. இந் நிகழ்ச்சியில் புகழ் பெற்ற பலர் பார்வையாளர்களாக கலந்து சிறப்பித்தனர். இந்த நிகழ்ச்சியை இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஒளிபரப்பு செய்தது.

இங்கிலாந்து சிறுவர் பாதுகாப்பு நிதியப் பணிப்பாளர் டாக்டர் ஆர். பார்சன் இந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்து ரூபா 100,000/- வை அன்பளிப்பு செய்தார்

சமாதான உடன்படிக்கை கைச்சாத்திட்ட பின்பு பிரதான மூலப் பொருள்களை கொழும்பிலிருந்து தருவிக்கக் கூடியதாக இருந்தது. இந்தியாவின் பியூனியில் அமைந்துள்ள செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் எ. செனாகல் எமது தொழிற்சாலைக்கு வருகை தந்தார்.

**செப்டெம்பர் 1987**

யு. எஸ். எய்ட் நிறுவனத்தைச் சேர்ந்த கொழும்பு பிரதிநிதிகளான திரு. டி எவ். இமேட்டும், திரு. மகேசனும் எமது தொழிற்சாலைக்கு வருகை தந்தார்கள்.

அவுஸ்ரேலியா உயர்ஸ்தானிகர் திரு. பான்கோன்னென் செப்டெம்பர் 3 ம் திகதி எமது தொழிற்சாலைக்கு வருகைதந்தார்.

**ஒக்டோபர் — டிசம்பர் 1987**

இந்திய இராணுவ சமாதான படையின் நடவடிக்கையினால் எமது தொழிற்சாலை வேலைகள் ஸ்தம்பிதமடைந்தது.

திட்டமிடல் செயலாளர் றீனி யோகநாதன் அவுஸ்ரேலியாவுக்கு குடியேறிச் சென்றார். டாக்டர் (திருமதி) ஜெ. கணேசமூர்த்தி புதிய திட்டச் செயலாளராக கடமையேற்றுக் கொண்டார்.

**பெப்ரவரி 1988**

ராஜஸ்தான் மாநிலத்தின் ஜெய்ப்பூர் செஞ்சிலுவைச் சங்க தலைவர் டாக்டர். பிற்றம்பார் தயாள் எவ். ஆர். சி. பி., சிரேஷ்ட கால் பொருத்துனர் திரு. முகமது ஹான் ஆகிய இருவரும் எமது தொழிற்சாலைக்கு வருகை தந்தார்கள்.

எமது தொழில் முகாமையாளரை நினைவூட்டல் பயிற்சிக்காக ஜெய்ப்பூருக்கு அனுப்புமாறு டாக்டர். தயாள்சிபார்சு செய்தார்.

**மே 1988**

ஜெனிவா செஞ்சிலுவைச் சங்க ஆசிய பசுபிக் பகுதித் தலைவர் டாக்டர் கிங்சிலி சீவரத்தினம் எமது தொழிற்சாலைக்கு வருகை தந்திருந்தார்.

எமது திட்டத் தலைவர் திருமதி த. குணநாயகம் அமெரிக்கா செல்ல உப தலைவர் சற்றா மேதர் தற்காலிகமாக தலைவர் பதவியை பொறுப்பேற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜூன் 1988

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தூதுக்குழுவும், செம்பிறைச் சங்கத்தின் தூதுவருமான திரு. இல்கா உசிற்றலும் எமது தொழிற் சாலைக்கு வருகைதந்தனர்.

## ஜூலை 1988

*01-07-1988* அன்று எமது நிறுவனம் தனது முதலாவதாண்டு நிறைவைக் கொண்டாடியது. இந்த நிகழ்வில் நூற்றுக்கும் அதிகமான செயற்கைக் கால் பாவனையாளர்கள் பங்கு கொண்டார்கள். அன்றைய தினம் அவர்களுக்கென செயற்கைக் கால் பாவனையாளர் சங்கமும் ஆரம்பிக்கப் பட்டது. இந்த நிகழ்ச்சிக்கு கொழும்பிலிருந்து டக்கோனிய பிரதிநிதி திரு. சிறின் போர்ஸ்ஸன், பிரித்தானிய உயர்ஸ்தானிக முதலாம் செயலாளர் திரு. ஜாக் ஜோன் அதே அமைப்பைச் சேர்ந்த இரண்டாம் செயலாளர் மைக்கல் போர்ட், கொழும்பு நட்புறவுச் சங்க திட்டமிடல் செயலாளர் திரு. சுவர்ணா பேடினண்ட், திரு. கெனட் பேர்டினண்ட் ஆகியோர் வருகை தந்து சிறப்பித்தனர்.

அன்று காலையில் செயற்கைக் கால் பொருத்தியவர்களுக்கு கருத் தரங்கும் துவிச்சக்கர வண்டி ஓட்டப் போட்டியும் நடைபெற்றன. பின்னர் அந்த நிகழ்வில் பங்கு பற்றிய அனைவருக்கும் மதிய போசன விருந்து வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பரியோவான் கல்லூரி மைதானத்தில் அஞ்சல் ஓட்டப் போட்டி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிகளில் பங்கு பற்றிய அனைவருக்கும் பரிசாக காசும், வெற்றியீட்டியவர்களுக்கு பரிசும் வழங்கப்பட்டது.

## ஓகஸ்ட் 1988

முதலாம் தரத்தைச் சேர்ந்த இளைப்பாறிய அரச உத்தியோகத்தர் திரு. எஸ். சிவநாதன் நிர்வாக செயலாளராக நியமிக்கப்பட்டார்.

## செப்டெம்பர் 1988

குறைபாடடைந்தவர்களுக்கான சர்வதேச நிறுவனத் தலைவர் திரு. டொமினிக் கொராட் எங்கள் தொழிற்சாலைக்கு வருகை தந்தார். எமது சேவையில் திருப்தி கொண்டதுடன் தானும் எங்களுடன் இணைந்து ஊன முற்றோருக்கான பணி செய்வதற்கு ஆர்வம் காட்டினார்.

*19.09.1988* இல் இந்திய செஞ்சிலுவைச் சங்கம் எட்டு செயற்கைக் கைகளை அன்பளிப்பு செய்தது. இவற்றை எந்தவித பயிற்சியும் இன்றி எமது முகாமையாளரும், தொழிநுட்பவியலாளர்களும் தகுதியானவர்களுக்கு பொருத்திக் கொடுத்தனர்.

## ஒக்டோபர் 1988

டயகோனியா நிறுவனத்தால் மூன்று சில்லு பஜாஜ் ஆட்டோ அன்பளிப் பாக வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நவம்பர் 1988**

இலண்டனில் உள்ள சிறுவர் பாதுகாப்பு நிதியத்தைச் சேர்ந்த மரியோன் பிராச் எங்கள் தொழிற்சாலைக்கு வருகை தந்தார்.

**டிசம்பர் 1988**

யாழ்ப்பாணத்துக்கான மின்சாரம் தடைப்பட்டது. மின் பிறப்பாக்கி மூலமே அதன் பின் மின்சாரம் வழங்கப்பட்டது. அரை மணித்தியாலமே வழங்கப்பட்ட மின்சாரத்தில் எமது நிறுவன வேலைகள் பெருமளவு தடைப்பட்டது.

**ஜனவரி 1989**

''வேல்ட் விஷன்'' நிறுவனத்தைச் சேர்ந்த திரு. பீட்டர் பெறி தனது உத்தியோகத்தர்களுடன் எங்கள் தொழிற்சாலைக்கு வருகை தந்திருந்த போது செயற்கைக் கால் பாவனையாளருக்கு புனர் வாழ்வளிப்பதற்காக ரூபா 270,000/- வை நன் கொடையாக வழங்கியிருந்தார். குறித்த திட்டமான சுழற்சி முறைக் கடனை முழு நாள் ஒன்று கூடல் நிகழ்ச்சி ஒன்றில் நடைமுறைப் படுத்துவது எனத் தீர்மானித்ததுடன் அதற்கான திகதியும் அன்றே நிர்ணயிக்கப்பட்டது.

1986 ம் ஆண்டில் எங்கள் திட்டத்துக்கு உதவி வழங்கியிருந்த நோர்வே நாட்டுத் தூதுவர் திரு. கிராட்டி டிகுராட் முதன் முறையாக எமது தொழிற்சாலைக்கு 31 ம் திகதி வருகை தந்திருந்தார்.

**மார்ச் 1989**

எமது தொழில் முகாமையாளரான திரு. எச்ஸ். எஸ். வை. பிரன்சிஸ் மூன்று வார பயிற்சிக்காக இந்தியாவின் ஜெய்ப்பூரிலுள்ள எஸ். எம். எஸ். மருத்துவ மனைக்கு சென்றிருந்தார். இக் காலப் பகுதியில் இவர் டாக்டர் பி. கே. சேத்தியை சந்திப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அச் சந்திப்பின் போது செயற்கைக் கால் சம்பந்தமான நுட்பங்களை கலந்துரையாடியதுடன் எமது தொழிற்சாலை பற்றியும் எடுத்துக் கூறியிருந்தார்.

செயற்கைக் கால் பாவனையாளரும் 'வேல்ட் விஷன்' நிறுவன பிரதிநிதிகளும் உள்ளடங்கிய சுழற்சி முறைக் கடன் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கான ஒன்று கூடல் முழு நாள் நிகழ்ச்சி 12 ம் திகதி நடைபெற்றது.

குறைந்த செலவில் சக்கர நாற்காலிகள், முச்சக்கர வண்டிகள் போன்றவற்றை உற்பத்தி செய்து வழங்குவதற்காக சர்வதேச வலுவிழந்தோர் நிறுவனத்தைச் சேர்ந்த திரு. பிற்ஸ் சேவியர் காட்யீயோவுடன் உடன்பாடு கைச்சாத்திடப்பட்டது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தற்காலிக கட்டடமும் கட்டப்பட்டது.

**ஜூலை 1989**

திரு. பிற்ஸ் சேவியர் காட்யீயோன் வேறு ஒரு செயற் திட்டத்துக்காக பிரான்ஸ்க்கு வரும்படி அழைக்கப்பட்டதனால் அவரது பொறுப்பை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. எரிக் விகோரி பொறுப்பேற்றுக் கொண்டார். குறைந்த செலவில் சக்கர நாற்காலிகளையும், முச்சக்கர வண்டிகளையும் தயாரிக்கும் தொழிற் சாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

**ஓகஸ்ட் – டிசம்பர்** 1989

யாழ்ப்பாணத்தின் சீரற்ற நிலைமை காரணமாக எமது நிறுவன செயற்பாடு தடைப்பட்டது.

10–12–1989 இல் ''ஊனமுற்றோர் புனர் வாழ்வுச் சங்கம்'' எனும் அமைப்பை நாங்கள் உருவாக்கினோம். அதன் ஆரம்பக் கூட்டம் எமது வேலைத் தளத்திலேயே நடைபெற்றது.

**ஜனவரி** 1990

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தூதுக்குழுவினர் ஜனவரி 7 ம் திகதி எமது தொழிற்சாலைக்கு முதன் முதலில் வருகை தந்திருந்தனர். இத் தூதுக் குழுவினர் 1989 ம் ஆண்டு காலப் பகுதியில் கொழும்பிலுள்ள விடுதியில் தங்கியிருந்த போது இங்கிருந்து கொழும்பு சென்ற எமது நிறு வன பணியாளர்கள் இவர்களை ஓகஸ்ட் மாதத்தில் சந்தித்து கலந்துரை யாடினார்கள். வடக்கிலிருந்து சென்று இத்தூதுக் குழுவினரை சந்தித்து முதன் முதலில் கலந்துரையாடியது எமது பணியாளர்களே என்பதை நினைவூட்ட விரும்புகின்றோம்.

நாட்டில் அப்போது நிலவிய சீரற்ற அரசியல் நிலைமையால் திரு. எரிக் வீகோரி ஜனவரி 12 ம் திகதி எமது தொழிற்சாலையிலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் விலகிச் சென்றார். அவர் இங்கிருந்து செல்லும் போது மனநிறைவின்றியே செல்வதாகவும் நாட்டு நிலைமை சீரடைந்ததும் மீண்டும் எமது நிறுவனத்துக்கு வருகை தருவதாகவும் வாக்களித்துச் சென்றார். எனினும் எமது பணியாளர்கள் அவர் விட்டுச் சென்ற பணியை தொடர்ந்து புரிகின்றனர்.

**பெப்ரவரி** 1990

''வேல்ட் விஷன்'' நிறுவனத்தைச் சேர்ந்த திரு. பீட்டர் பெறி இரண்டாவது தடவையாக எமது தொழிற்சாலைக்கு வருகை தந்திருந் தார். அம்முறையும் சுழற்சி முறைக் கடன் வழங்கும் திட்டத்துக்காக மேலும் ஒரு தொகையை வழங்கியிருந்தார்.

**மார்ச்** 1990

எங்கள் தொழிற்சாலைக்கு சுவீடன் தூதுவ உத்தியோகத்தர்கள் வருகை தந்தார்கள். அத்தூதுக் குழுவில் சுவீடன் தூதராலயத்தைச் சேர்ந்த திரு. குனில்லா லொன் பாகர்ரொட் பெக்கும், சீடா அமைப்பைச் சேர்ந்த திட்டமிடல் உத்தியோகத்தர் மேரி அன்ட்ஏர்சனும், அதே அமைப்பைச் சேர்ந்த மேபிறிட்டும் இடம் பெற்றிருந்தார்கள்.

**ஏப்பிரல்** 1990

அவுஸ்திரேலியா உயர்ஸ்தானியாலயத்தைச் சேர்ந்த திரு. ஜி. கெபேற் எங்கள் தொழிற்சாலைக்கு 4 ம் திகதி வருகை தந்தார். அவர் எங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைத்திறனைப் பாராட்டியதுடன் அவுஸ்திரேலியா உதவித் திட்டத்தின் கீழ் மேலும் எமக்கு உதவி வழங்குவதாக வாக்குறுதியளித்தார்.

பிரித்தானியாவின் மூன்றாவது செயலாளர் திருமதி ஜேன் கொன்பீல்ட் 6 ம் திகதி எமது தொழிற்சாலைக்கு வருகை தந்தார்.

'ஏப்பிரலில் ஓரிரவு' எனும் சங்கீத இசை நிகழ்ச்சி எமது நிறுவன வளர்ச்சிக்கு நிதி சேர்ப்பதற்காக 27 ம் திகதி பரியோவான் கல்லூரியில் நடைபெற்றது.

**மே 1990**

இலங்கையிலுள்ள பிரித்தானிய தூதுவர் திரு. டாஸ் கிலாட்ஸ்ரனும் அவரது மனைவியும் எமது தொழிற்சாலைக்கு வருகை தந்தார்கள். எங்கள் நிறுவன செயற்பாடுகளால் கவரப்பட்ட அவர் எமக்கு உதவி செய்வதாக வாக்குறுதியளித்தார். சொந்தக் காணி எங்களுக்கு இருக்குமென்றால் எமக்கென ஓர் கட்டடம் கட்டுவதற்கும், உதவி செய்வதாக உறுதியளித்தார்.

**டிசம்பர் 1990**

திருமதி ஈடா மேதர் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்றார். அங்கிருந்து எமது நிறுவன தொடர்பு உத்தியோகத்தராக கடமை புரிந்தார். எமது பதில் தலைவியாக திருமதி எல். சிவராமலிங்கம் பதவி ஏற்றார்.

**ஜனவரி 1991**

சுகவீன முற்றோரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு ஏற்ற வடிவமைப்பில் எமது ஓ. எச். ஐ. பிரிவில் தயாரிக்கப்பட்ட முச்சக்கர வண்டிகளை துவிச்சக்கர வண்டியில் இணைத்து இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டது.

**ஏப்பிரல் 1992**

செயற்கைக் கால் பாதங்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் நோக்கத்துடன் பாதங்களை கொள்வனவு செய்வதற்காக திருமதி ஈடா மேதர் 26 ம் திகதி இந்தியா சென்றார். அங்கு அவர் 300 பாதங்களை கொள்வனவு செய்தார். இதற்கான செலவை சிறுவர் பாதுகாப்பு நிதியம் தந்துதவியது. திருமதி ஈடா மேதர் திரும்பி வரும்போது 100 பாதங்களை தன்னுடன் எடுத்து வந்தார்.

**மே 1992**

யாழ் ஜெய்ப்பூரின் தள நிலைமைகளை கொழும்பிலுள்ள எமது தாய்ச் சங்கத்துக்கு எடுத்துக்கூறி கலந்தாலோசிப்பதற்காக திருமதி தி. யோகநாதன் கொழும்பு சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஜூலை 1993**

இந்தியாவில் கொள்வனவு செய்யப்பட்டு இங்கு கொண்டுவரப்படா திருந்த 200 பாதங்களை இங்கு கொண்டுவருமாறு சிறுவர் பாதுகாப்பு நிதியத்தால் விடுவிக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று திருமதி. யோகநாதன் சென்னை சென்றார்.

**டிசம்பர் 1993**

வறிய சிறுவர்களுக்கு கல்வி மானியம் வழங்கவென 14-12-93 ல் திருமதி. ஜீன் சாமுவேல் 15000/- நிதியை ஒதுக்கித் தந்ததுடன் இரண்டா வது தவணைப் பணம் தருவதாகவும் உறுதியளித்தார்.

**பெப்ரவரி 1994**

எமது முகாமைத்துவ குழுவின் அங்கத்தவரான திருமதி யோகா சிவநேசன், எமது நிறுவனத் தலைவர் திருமதி. த. குணநாயகம் அவர்க ளின் கணவன் ஆகியோர் காலமானார்கள்.

**ஜூலை 1994**

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட எமது நிறுவன இயன் மருத்துவ பிரிவு யாழ்ப்பாண சிறுவர் பாதுகாப்பு நிதிய வதி விட பிரதிநிதியான திரு. ஜோனதன் குட்காண்ட் அவர்களால் சம்பிர தாயபூர்வமாக திறந்துவைக்கப்பட்டது.

செயற்கை அவையவ பாவனையாளருக்கான விளையாட்டு போட்டி 22-07-94 இல் 7 வது ஆண்டு நிறைவு தின விளையாட்டு நிகழ்வாக நடைபெற்றது. யாழ் பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் கயிறுஇழுத்தல்போட்டி செயற்கைக் கால் பொருத்தியோருக்கும், அங்கவீனமடையாதோருக்கும் இடையில் நடைபெற்றது. இதில் செயற்கைக் கால் பொருத்தியோரே வெற்றி பெற்ற னர். இது மறக்க முடியாத ஓர் நிகழ்வாகும். இது செயற்கைக் கால் பொருத்தியோரின் மனோதிடத்தைக் காட்டுகின்றது. இதே போல் செயற் கைக் கால் பொருத்திய ஒருவர் ஒரு வட்ட தாம்பாளத்தில் நின்று செம்பு நடனம் ஆடி எல்லோரையும் மெய்சிலிர்க்க வைத்தார். இந்த நிகழ்ச்சிக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணப் பிரிவுத் தலைவர் திருமதி மேரி பேர்கிங்ஸ் பிரதம விருந்தினராக கலந்து சிறப் பித்தார்.

**ஒகட்ஸ் 1994**

திருமதி. ஈடா மேதர் வெளிநாட்டில் குடியேறுவதற்காக 20 ம் திகதி அவுஸ்ரேலியாவிற்கு பயணமானார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் பிளாஸ் ரிக் கால் செய்வது சம்பந்தமான 5 கிழமைப் பயிற்சிக்காக எமது தொழில் முகாமையாளர் திரு. எக்ஸ். எஸ். வை, பிரான்சிஸ் 'அடிஸ் அபேபா' வுக்கு பயணமானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**செப்டெம்பர் 1994**

எங்கள் நிறுவனத்துக்கு வருகை தந்து ஆலோசனை வழங்கும் சத்திர சிகிச்சை நிபுணரான டாக்டர். எஸ். பொன்னம்பலம் கொழும்பில் காலமானார் எமது நிறுவன வேலைகளை இவர் பாராட்டுவதோடு மட்டுமன்றி பல்வகை ஆலோசனைகளையும் வழங்கிவந்தார். அவயவம் பொருத்தும் போது ஏற்படும் பிரச்சனைகளுக்கு தீர்வுகளையும் வழங்கி வந்தார் தற்போது அவர் எங்கள் மத்தியில் இல்லாவிட்டாலும் அவரின் அறிவுரைகளும் வழிகாட்டலும் எங்கள் மனதில் நீங்கா இடம் பெற்று விட்டது. அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

இலண்டனில் நடைபெற்ற சர்வதேச மருத்துவர்கள் மாநாட்டில் எமது கௌரவ பொருளாளர் டாக்டர் (திருமதி) எஸ். தெய்வேந்திரன் பங்கு பற்றி ''இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டோர் எதிர் பார்க்கும் மருத்துவசேவை'' எனும் தலைப்பில் தனது கருத்தை முன்வைத்தார்.

**மார்ச் 1995**

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் பிளாஸ்ரிக் கால்களை உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் எமக்கு அன்பளிப்பு செய்யப்பட்டது.

நான்கு வருட நிதி உதவிகோரி திட்டம் ஒன்று நோராட் அமைப்புக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இது சம்பந்தமான மதிப்பீட்டை மேற்கொள்வற்தகாக நோர்வே நாட்டுத் தூதுவர் எமது தொழிற்சாலைக்கு வருகை தந்தார். எமது திட்டத்திற்கு நோராட்டின் அங்கீகாரம் கிடைத்தது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் எமது திட்டத்தை தன்னிச்சையாக கண்காணிக்க முன்வந்தது.

**ஓகஸ்ட் 1995**

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் 440 வோல்ட் மூன்று இணைப்பு மின்சாரம் வழங்கப்பட்டது.

**ஒக்டோபர் 1995**

யாழ்ப்பாண மக்கள் 30 ம் திகதி எதிர்பாராத இடப் பெயர்வின் காரணமாக வடமராட்சிக்கும், தென்மராட்சிக்கும் சென்றனர். மக்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிய பின் நாமும் எமது தொழிற்சாலையின் முக்கியமான சில பொருட்களுடன் தென்மராட்சியில் அமைந்துள்ள கமலாசனி வித்தியாலயத்திற்கு இடம் மாறினோம். இடப்பெயர்வினால் பற்பல இடங்களிலும் தங்கியிருந்த எமது பணியாளர்களை கண்டு பிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**ஜனவரி 1996**

கமலாசனி வித்தியாலயத்தின் ஒரு வகுப்பறையில் செயற்கை அவயவம் பழுதுபார்க்கும் வேலைகள் சில பணியாளருடன் ஆரம்பிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மார்ச் 1996**

சாவகச்சேரி கச்சாய் வீதியில் அமைந்துள்ள இடவசதியுடனான வீடு ஒன்றிற்கு எமது தொழிற்சாலையை இடம் மாற்றி செயற்கை அவயவம் பொருத்தும் வேலையை மீள ஆரம்பித்தோம். இதன் மூலம் எமது தொழிற்சாலை வழமை நிலைக்கு திரும்பியது.

**ஏப்ரில் 1996**

''றிவிரச'' இரண்டாவது கட்ட இராணுவ நடவடிக்கையால் மீண்டும் பணியாளர்கள் பற்பல இடங்களிலும் சிதறுண்டு வாழும் நிலை ஏற்பட்டது. இக்காலப் பகுதியில் தொழிற்சாலையின் அனேக மூலப் பொருள்களும், உபகரணங்களும் சூறையாடப்பட்டும் தொலைந்தும் காணாமற் போயின.

**மே 1996**

வடமராட்சியில் தங்கியிருந்த பணியாளர்கள் சாவகச்சேரியில் எஞ்சியிருந்த எமது தொழிற்சாலை பொருள்களை யாழ்ப்பாணத்தில் அமைந்திருந்த எமது நிரந்தர தொழிற்சாலைக்கு மீள கொண்டுவந்தனர். எமது கட்டடம் சேதமடைந்து காணப்பட்டதுடன் இங்கு விட்டுச் சென்ற பொருட்களையும் இழந்திருந்தோம்.

நிர்வாக செயலாளராக கடமையாற்றிய திரு. எஸ். சிவநாதன் தனது பதவியை ஜூன் மாதத்தில் இருந்து இராஜினாமா செய்வதற்கான பதவி விலகல் கடிதத்தை சமர்ப்பித்தார்.

திரு. ப. பாலேந்திரன் கணக்கியல் உத்தியோகத்தராக நியமிக்கப்பட்டார்.

**ஜூன் – டிசம்பர் 1996**

எமது தொழிற்சாலையை மீளவும் ஆரம்பிக்கும் நோக்குடன் கட்டடங்கள் திருத்தப்பட்டது, அத்துடன் மூலப் பொருள்கள், உபகரணங்களை தருவிப்பதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டது. யாழ்ப்பாண ஜெய்ப்பூர் நிறுவனத்துக்கு தேவையான மூலப் பொருள்களை கொழும்பிலிருந்து தருவிப்பதற்கான தடையை நீக்குமாறு கோரி எமது தாய்ச் சங்கமான கொழும்பு நட்புறவுச் சங்கத்தின் போசகரான இலங்கை சனாதிபதிக்கு மகஜர் ஒன்றை முகாமைத்துவ குழு சார்பில் திருமதி தி. யோகநாதன் அனுப்பிவைத்தார்.

எமது முன்னைய முகாமைத்துவ குழு அங்கத்தவரான திருமதி. பூரணம்பிள்ளை ஐக்கிய இராட்சியத்தில் (UK) இருந்து நிதி வசூலித்து அனுப்பியிருந்தார்.

**ஜனவரி 1998**

அஞ்சல் திணைக்களத்திலிருந்து ஓய்வு பெற்ற நுண்ணாய்வு பரிசோதகர் திரு. நா. சிவநாதன் புதிய நிர்வாக செயலாளராக நியமிக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நிறுவனத்தைச் சேர்ந்த புனர்வாழ்வுப் பணியாளர்களான திருமதி. சி. சுகந்தியும், திருமதி ஜெ. இரட்ணவேணியும் யாழ்ப்பாண அரசினர் போதனா வைத்தியசாலையின் பிரதம இயன் மருத்துவரிடம் இயன் மருத்துவம் சம்பந்தமான பயிற்சிக்காக அனுப்பப்பட்டனர்.

மார்ச் 1998

கொழும்பிலிருந்து மூன்றாம் கட்டமாக மூலப் பொருள்களும் உபகரணங்களும் வந்து சேர்ந்தன.

ஏப்பிரல் 1998

இலங்கையிலுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரிவுத் தலைவரான திரு. இல்கா உசிற்றாலா பத்து வருடத்தின் பின் இரண்டாவது தடவையாக எமது தொழிற்சாலைக்கு வருகைதந்தார்.

ஜூலை 1998

சேதமடைந்திருந்த இயன் மருத்துவப் பிரிவு புதிப்பிக்கப்பட்டு கொழும்பிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட புதிய இயன் மருத்துவ உபகரணங்கள் பொருத்தப்பட்டன.

எங்கள் செயற்திட்டத்துக்கு மேலதிக உதவியை பெற்றுக் கொள்வதற்காக எமது திட்டப்பணிப்பாளரும் கௌரவ பொருளாளரும், யு. எஸ். எய்ட் நிறுவனத்துடன் கலந்துரையாடினார்கள்.

செப்டெம்பர் 1998

கம்போடியாவிலிருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்க உறுப்பினரான செயற்கை அவயவங்களை பொருத்தும் நிபுணர் திரு. அன்டுறு சிமித் எமது தொழிற்சாலைக்கு வருகை தந்தார்.

டிசம்பர் 1998

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் 15 கே. வி. ''சேர்டன்'' மின்வலு பிறப்பாக்கி ஒன்றை அதன் யாழ். கிளையினூடாக அன்பளிப்பு செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவும் கரங்கள்

எமது 11வது ஆண்டு மலரின் பிரசுரம் நாம் எதிர்பாராத வகையில் தாமதமாகியுள்ளமை, ஒரு பொருத்தமான காலகட்டத்தில், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் எமது ஜெய்ப்பூர் கால் பொருத்தும் சேவைத் திட்டத்திற்கு தாம் ஏற்கெனவே வழங்கிவரும் உதவிகளுக்கு மேலதிகமாக தமது கால் பொருத்தும் நிபுணர் ஒருவரின் சேவையினையும் வழங்க முன் வந்தமைக்கு நாம் எமது மனம் நிறைந்த நன்றியறிதலையும் அவர் தம் உதவியையும் மெச்சி எமது பாராட்டுக்களையும் வெளிப்படுத்த ஒரு சந்தர்ப்பமாக அமைந்துள்ளதையிட்டு நான் மிகவும் மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

நாம் வசிக்கும் பிரதேசத்தில் அமைதியும் நிறைவும் கொண்ட இயல்பு வாழ்க்கை நடைபெறுகிறது போல மேலோட்டமாகத் தென்படுகிறது. ஆனால் உண்மையான நிலைமை அத்தகையது அல்ல. நாம் பயங்கர யுத்தகால நடவடிக்கைகளினதும், பின் ஏற்பட்ட மாபெரும் வெளியேற்றத்தின் பின் விளைவுகளில் இருந்தும் இன்னும் முற்றாக மீழ்ச்சியடையவில்லை. எமது ஜெய்ப்பூர் திட்டம் சம்பந்தமான வேலைகளை முன்னெடுத்துச் செல்வதில் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. எமது வேலைக்கு மிக அத்தியாவசியமான மூலப் பொருட்களை கொழும்பிலிருந்து தருவிப்பதில் உள்ள தடைகளுக்கு எதிராக நாம் இன்னும் போராடிக் கொண்டிருக்கிறோம். நோயாளிகளின் போக்குவரத்திலும் தாமதங்களும் தடைகளும் ஏற்படுகின்றன. உற்பத்திச் செலவுகளும் கூடிக் கொண்டே போகின்றன. இராணுவ நடவடிக்கைகளுக்கு அண்மித்த பகுதிகளில் நாம் வசிக்கின்றோம். மிதிவெடிகளின் அபாயங்களுக்கு உள்ளாகக் கூடிய நிலையில் நாம் இன்றும் உள்ளோம். எமது எதிர்காலம் எப்படி அமையப் போகின்றது என்ற கேள்விக்குறியான நிலையில் எம் வாழ்நாள் கழிந்து கொண்டே செல்கின்றது. எம் மத்தியில் உள்ள உடல் ஊனமுற்றோரின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியது. அவர்களில் பலர் தமக்கு மிகவும் நெருங்கியவர்களிடமிருந்து பிரிந்து இருக்கிறார்கள். அவர்களின் உடல் ஊனத்திலும் பார்க்க உளப்பாதிப்பும் மன ஏக்கமும் சொல்லுந்தரமன்று. உடல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும், ஜெய்ப்பூரில் இருக்கும் நாங்கள் எங்களாலான உதவிகளைச் செய்து வருகின்றோம். அவர்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு மேலும் உதவிடும் வகையில் எமது ஊக்குவிப்புத் திட்டங்களை விஸ்தரிக்க ஆவன செய்து வருகின்றோம். எமது ஸ்தாபனத்தின் செயற் திறனையும் தொழில் நுட்பத்தையும் மேலும் திறம்படச் செய்து எமது உற்பத்தியின் அளவுகளையும் கூட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுத்து வருகின்றோம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைச் சார்ந்த கால் பொருத்தும் நிபுணர் திரு. ஜெறால்ட் (f) பிற்ஸ்பற்றிக் அவர்கள் எம்முடன் இணைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்பட வந்துள்ளமை எமது அபிலாஷைகளும் முயற்சிகளும் நிறைவு பெற ஒரு பொருத்தமான ஒரு பக்கத்துணை என்றே நாம் கருதுகிறோம்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஒரு தனிப்பட்ட, பாரபட்சமற்ற நடுநிலையான, சுயாதீன மனிதநேய அமைப்பு என்பது எங்கள் எல்லோருக்கும் தெரியும். ஆயுதமோதல்கள் உள்நாட்டுக் கலகங்கள் என்பவற்றால் பாதிக்கப்படும் மக்களுக்கு பாதுகாப்பும் உதவியும் வழங்குவதற்காக உலக நாடுகளினால் அதிகாரம் அளிக்கப்பட்ட ஸ்தாபனம் இதுவாகும். **1989**ம் ஆண்டு முற்பகுதியில் இலங்கை அரசின் அழைப்பை ஏற்று இங்கு வந்து தனது பலதரப்பட்ட சேவைகளை இச் சங்கம் மேற்கொண்டு வருகின்றது.

யுத்த வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பது இதன் பிரதான பணிகளிலொன்றாகும். யுத்தங்களினால் மிகவும் மோசமாக பாதிக்கப்படைபத்துக்கு பேறபட்ட நாடுகளில் செயற்கைக் கால் பொருத்தும் நிலையங்களை அமைத்தும், பொருளாதார புனர்வாழ்வுத் திட்டங்களை மேற்கொண்டும், சீரான பணிகளை ஆற்றி வருகின்றது. தொழில் நுட்பத்தில் உயர்வான செயற்கை அவயவங்களையும்; ஊன்றுகோல்களையும், சக்கர நாற்காலிகளையும் ஆயிரக்கணக்கில் உற்பத்தி செய்து தேவையானவர்களுக்கு விநியோகித்து வருகின்றது. எமது ஜெய்பூரின் சேவையும் இவர்களின் பணிக்கு ஒத்ததாக அமைந்துள்ள காரணத்தினால் தான் இலங்கையில் செயல்பட்டுவரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தனது யாழ் கிளையின் ஊடாக இவ்வாண்டு மார்ச் மாதத்திலிருந்து எமது ஸ்தாபனத்துக்கு தாம் ஏற்கெனவே வழங்கி வரும் உதவிகளுக்கு மேலதிகமாக சில விசேஷ ஒத்தாசைகளைச் செய்ய முன்வந்துள்ளது.

இவ்வளவு காலமும் இச் சங்கம் தேவை ஏற்படுமிடத்து கொழும்பிலிந்து நாம் தருவிக்கும் மூலப்பொருட்களை தங்கள் கப்பல் மூலம் கொண்டுவந்து தந்து உதவியிருக்கின்றது. வெளிநாட்டு நிதிவழங்கும் ஸ்தாபனங்கள், தாம் எங்களுக்கு நிதியுதவிகளை அளிக்கும் பட்சத்தில் அவற்றை மேற்பார்வையிட தகுதியான ஒரு அமைப்பு யாழ் நகரில் இல்லை என்ற ஒரே காரணத்துக்காக தயக்கம் காட்டிய சந்தர்ப்பங்களில் எல்லாம் இச் சங்கம் தாமாகவே முன் வந்து மேற்பார்வையிட தமது ஒப்புதலைக் காட்டிஎமக்கு நிதி வசதிகள் கிடைக்க வழி செய்திருக்கின்றது. எமது ஜெய்ப்பூர் கால் பாவனையாளருக்கு நாம் விளையாட்டுப் போட்டிகள் நடத்திய போதெல்லாம் இச்சங்கத்தினர் மனமுவந்து எங்களுக்கு பொருள் உதவியோடு மன ஊக்கத்தையும் தந்துதவினர். நவீன தொழில் நுட்பம் நிறைந்த கால்களை உருவாக்க எமது வேலை முகாமையாளருக்கு தமது சர்வதேச பட்டறை ஒன்றில் பயிற்சியும் கொடுத்தனர். யாழ்ப்பாணத்திலும் தமது சர்வதேச பட்டறைகளையொத்த ஒரு தொழிற் கூடத்தை உருவாக்க பூர்வாங்க நடவடிக்கைகளை எடுத்த போதிலும் 1995ம் ஆண்டு கடைசியில் இங்கு ஏற்பட்ட அசம்பாவிதங்களினால் அவை கைகூடவில்லை.

திரு. (F) பிற்ஸ் அவர்களின் வருகை எங்கள் நம்பிக்கைகளுக்கு - எதிர்பார்ப்புகளுக்கு அருமருந்தாக — புதியதோர் விடியலாக அமைந்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க நாட்டவரான இவர் தமது பட்டப்படிப்பை முடித்துக்கொண்ட பின் மூன்று வருடகாலம் செயற்கை அவயவம் பொருத்தும் துறையில் விசேஷ பயிற்சி பெற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் செயற்கை அவயவம் பொருத்தும் மருத்துவ நிலையமொன்றில் பணிப்பாளராக கடமையாற்றியவர். ஊனமுற்றவர்கள் பால் இவர் காட்டும் பரிவுணர்வு நெஞ்சங்களைத் தொடவைக்கும் எமது ஸ்தாபன ஊழியருடன் சில சமயங்களில் மொழிப்பரிவர்த்தனையில் சிரமங்களை எதிர் கொண்டாலும் அவற்றினைச் சாதுர்யமாக விளங்கி கலந்துரையாடி தொழில் நுட்பங்களைப் பரிமாறி எல்லோரினுடைய மனங்களையும் கவர்ந்துள்ளார். எங்களுடன் வேலை செய்யும் காலப்பகுதியில் நவீன தொழில்நுட்பம் வாய்ந்த 100 செயற்கைக் கால்களை உற்பத்தி செய்ய தீர்மானித்துள்ளார். அத்துடன் நோயாளிகளின் போக்குவரத்தில் உதவி புரியவும், உடற் கூற்றியல் மற்றும் உடல் நலவியல் ஆகிய துறைகளில் 10 பேருக்கு பல்கலைக்கழக பயிற்சி அளிக்கவும். தொழில்நுட்ப ஊழியரின் திறனை விருத்தி செய்யவும். எமது வேலைத்தல வசதிகளை அபிவிருத்தி செய்யவும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். எமது பணிகள் மின்சாரத் தடங்கல்களினால் பாதிப்படையாவண்ணம் பாதுகாக்க சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் எமக்கு ஒரு 15 kv மின்வலுவுள்ள மின் பிறப்பாக்கியையும் தந்துதவியிருக்கின்றது.

திரு (f) பிறஸ் அவர்களுடைய நிபுணத்துவத்தையும் அனுபவத்தையும் தக்க முறையில் நாம் பயன்படுத்தி எமது தொழில்நுட்பவியலாளரின் செயற்திறனையும் விருத்தி செய்தோமானால் புதிய உபகரணங்களினதும், நவீன தொழில்நுட்பத்தினதும் உதவியுடன் நாம் எமது பொருளாதார வசதிகளுக்கு ஏற்றவாறு நவீன செயற்கைக் கால்களை உற்பத்தி செய்யலாம். பொலிபுறப்பைலினினாலான (ஒருவகை பிளாஸ்ரிக்) செயற்கைக்கால்களை தயாரிப்பதில் பல அநுகூலங்கள் உண்டு. எமது முயற்சிகள் வெற்றி பெற்று செயற்கைக்கால் பாவனையாளருக்கு சிறந்ததொரு எதிர்காலம் அமையும் என்பதில் எமக்கு நம்பிக்கையுண்டு

**ந். யோகநாதன்**

மே 1999 திட்டப்பணிப்பாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊனமுற்றோருக்கான உங்கள் நன்கொடைகளை

ஜெய்ப்பூர் செயற்கைக் கால் திட்டம்

இல. 5, பழைய பூங்கா வீதி, சுண்டிக்குழி,

யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு

அனுப்பிவைக்குமாறு வேண்டுகின்றோம்.

## உங்கள் காசோலைகளை

"கொழும்பு நட்புறவுச் சங்கம், யாழ்ப்பாணக் கிளை" யின் கொமர்ஷல் வங்கி நடைமுறைக் கணக்கு இல. 12833 ற்கு அல்லது இலங்கை வங்கி யாழ்ப்பாணக் கிளையின் நடைமுறைக் கணக்கு இல. C 24029 ற்கு அனுப்பி வைக்கவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Designed & Printed By : New Karthikeyan Printers (Pvt) Ltd. Colombo - 6. Tel : 505875

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org